வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.235, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 26.08.2025 செவ்வாய்க்கிழமை இதழ் : 238 பக்கங்கள் : 12

# வட, கிழக்கில் 29ஆம் திகதி கையெழுத்து போராட்டம்!

## தமிழ்த் தேசிய கட்சிகள் கூட்டாக அழைப்பு



- பு. கஜிந்தன், த. பிரதீபன் -

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 26

**சர்வதேச விசாரணையை கோரியும் சித்துப்பாத்தி மனிதப் புதைகுழி அகழ்வில் சர்வதேச கண்காணிப்பை வலியுறுத்தியும் எதிர்வரும் 29ஆம் திகதி வடக்கு, கிழக்கு தழுவிய கையெழுத்து போராட்டம் நடைபெறவுள்ளது.**

இந்தப் போராட்டத்துக்கான அழைப்பை ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் பங்காளி கட்சிகள், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, இலங்கைத் தமிழ் அரசு கட்சி என்பன கூட்டாக நேற்று யாழ்ப்பாணத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் விடுத்தன.

இதன்போது, கட்சிகளின் தலைவர்கள் கூட்டாக தெரிவித்த விடயங்கள் வருமாறு,

வடக்கு - கிழக்கில் பல்வேறு இடங்களில்மனிதப் புதைகுழிகள் காணப்படுகின்றன.

11

அரியாலை மனித புதைகுழி:

## அகழ்வை விரிவுபடுத்தும் பணிகள் நேற்று ஆரம்பம்

- த. பிரதீபன் -

யாழ்ப்பாணம், ஒக. 26

அரியாலை மனிதப் புதைகுழிகள் அகழ்வை மேலும் விரிவாக்கம் செய்யும் பணிகள் நேற்றைய தினம் ஆரம்பிக்கப்பட்டது. இந்தப் பணிகள் இன்றைய தினமும் தொடரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அரியாலை - சித்துப்பாத்தி இந்து மயானத்தில் கண்டறியப்பட்ட மனிதப் புதைகுழிகளில்அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்தப் பணி இரண்டாவது கட்டமாக மூன்றாவது பகுதியாக

11

## இந்தியாவிலிருந்து திரும்பியவர் படையினரால் தாக்கப்பட்டார்!

யாழ்ப்பாணம், ஒக. 26

இந்தியாவுக்கு அகதியாக சென்றவர் படகு மூலமாக நாடு திரும்பிய நிலையில், அவர் கடற்படையினரால் கடுமையாக தாக்கப்பட்டார். அவர் தற்போது, யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார் என்று தெரிய வருகிறது.

முல்லைத்தீவு - உடையார்கட்டை சேர்ந்த

11

## காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கோரி சனியன்று போராட்டம்

ஆதரவு தருமாறு சகலரிடமும் கோரிக்கை

- பு. கஜிந்தன் -

யாழ்ப்பாணம், ஒக. 26

காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கோரி எதிர்வரும் சனிக்கிழமை யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் போராட்டங்கள் நடைபெறவுள்ளன. இந்தப் போராட்டங்களுக்கு சகல தரப்பினரும் ஆதரவு தரவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ். ஊடக அமையத்தில் போராட்ட ஏற்பாட்டாளர்கள் நேற்றையதினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

மேலும், சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினம் எதிர்வரும் 30ஆம் திகதி சனிக்கிழமை கடைப்பிடிக்கப்படுகிறது. அன்றைய தினம் இந்தப் போராட்டங்களுக்கு வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம் அழைப்பு விடுக்கிறது.

11

## படை முகாம்களை அகற்றுமாறு பருத்தித்துறையில் போராட்டம்!

- சி.தில்லைநாதன், பு.கஜிந்தன் -



வடமராட்சி, ஒக. 26

பருத்தித்துறை நகரிலுள்ள படை முகாம்களை அகற்றுமாறு வலியுறுத்தி நேற்று திங்கட்கிழமை மக்கள் போராட்டம் நடைபெற்றது.

பருத்தித்துறை நகர சபை தவிசாளர்

11



## யாழ். வந்த தமிழக மீனவர் குழு படகுகளை கொண்டு செல்கிறது

யாழ்ப்பாணம், ஒக. 26

விடுவிக்கப்பட்ட தமது படகுகள் நல்ல நிலையில் இருப்பதால் அவற்றை தமிழகத்துக்குக் கொண்டு செல்வதற்கு நேற்று யாழ்ப்பாணம் வந்த தமிழக மீனவர் குழு முடிவு செய்துள்ளது.

எல்லை தாண்டி மீன் பிடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு நீதிமன்றால் விடுதலை செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் தமது படகுகளை பார்வையிடுவதற்காக நேற்றைய தினம் யாழ்ப்பாணம் வந்தனர். இவ்வாறு வந்த தமிழக மீனவர்கள் மயிலிட்டியில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அவர்களின் படகுகளை நேற்று பார்வையிட்டனர்.

11

## புதில் பாடசாலை சனிக்கிழமை நடைபெறும்

யாழ்ப்பாணம்,ஒக. 25

யாழ்ப்பாண மாவட்டத்தில் எதிர்வரும் சனிக்கிழமை பாடசாலைகள் நடைபெறும் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

நல்லூர் கந்தசுவாமி ஆலய தேர் திருவிழாவான கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகளுக்கு விசேட விடுமுறை வழங்கப்பட்டது. இதற்கு அமைவாகவே எதிர்வரும் 30ஆம் திகதி சனிக்கிழமை பாடசாலைகள் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## குருக்கள்மடம் புதைகுழியை அகழ நீதிமன்றம் கட்டளை!

- பாறுக் சிஹான் -

கல்முனை, ஒக. 26

குருக்கள்மடம் மனிதப் புதைகுழியை அகழுமாறு களுவாஞ்சிக்குடி நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

இந்த வழக்கு நேற்று திங்கட்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டபோதே நீதிவான் ஜே. பி. ஏ. ரஞ்சித் குமார் இந்த உத்தரவை பிறப்பித்தார்.

1990ஆம் ஆண்டு புனித ஹஜ் யாத்திரையை

11

## அடுத்த ஆண்டில் வடக்குக்கு அதிகளவான நிதி ஒதுக்கீடு!

வடக்கு ஆளுநர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக. 26

வடக்கு மாகாண சபைக்கு அடுத்த ஆண்டு அதிகளவான நிதி ஒதுக்கப்படவுள்ளது எனத் தெரிவித்த வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தக்கூடிய திட்டங்களை இப்போதே தயார் செய்யுமாறும் பணித்தார்.

11

## 108 ஜோடிகளுக்கு நாளைமறுதினம் யாழில் திருமணம்!

யாழ்ப்பாணம்,ஒக. 26

யாழ்ப்பாணத்தில் 108 ஜோடிகள் நாளை மறுதினம் வியாழக்கிழமை திருமண பந்தத்தில் இணையவுள்ளன.

திருமண வயதை எட்டியும் பொருளாதார நிலைமையால் திருமண பந்தத்தில் இணைய முடியாதிருக்கும் 108 ஜோடிகளே இவ்வாறு திருமண பந்தத்தில் இணையவுள்ளன என்று வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஜெயசேகரம் தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூர் வாழ் தமிழரான ரி துரை சுமதினி என்பவரின் நிதி பங்களிப்பில் இந்த

11

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# போர் காலத்திலும் அபிவிருத்தி குறித்து நமது இனம் சிந்தித்தது

## யாழ். இந்து கல்லூரி அதிபர்



யாழ்ப்பாணம், ஓக. 26

வட மாகாண நீர்வளம் பேணுதற்கான பேராய்வு செயல் திட்டத்தின் ஓர் அங்கமாக 'நிலத்தடி நீர் எங்கள் உயிர் நாடி' என்னும் தொனிப்பொருளில் அமைந்த நல்லூர் நீர்க் கண்காட்சியில் கடந்த சனிக்கிழமை ஓய்வு நிலை பேராசிரியர் ந. சிறீஸ்கந்தராஜா தலைமையில் நடந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட தலைவரான ராஜேந்திரன் சுரேந்திரகுமாரன், யாழ். இந்துக் கல்லூரியின் அதிபர் இரட்ணம் செந்தில்மாறன், நீர்வள சபை, நீர்ப்பாசனத் திணைக்களம், நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை, யாழ். மாநகர சபை உள்ளிட்ட பல தன்னார்வ அமைப்புகளை சேர்ந்த பிரதிநிதிகள், ஆசிரியர்கள், பொதுமக்கள் எனப் பலர் பங்கேற்றனர்.

இங்கு உரையாற்றிய யாழ். இந்து அதிபர் இ. செந்தில் மாறன் தெரிவிக்கையில்,

நீண்ட வருடங்களுக்கு பின்னர் நல்லூர் திருவிழாவுக்கு வந்துள்ளேன். நான் 1993, 1994 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் தியாகதீபம் திலீபனின் நினைவுத் தூபிக்கு பின்புறமாகவுள்ள பிராமணக்கட்டுக் குளப்பகுதி சுற்றாடலில் பொருண்மிய மேம்பாட்டு கழகத்தினர் அறிவியல் பொருளாதார கண்காட்சியை ஏற்பாடு செய்திருப்பார்கள்.

ஆறாம், ஏழாம் ஆண்டு படிக்கும் காலத்தில் அடிக்கடி அதனைப் பார்க்கப் போவோம். ஆக்கி வாயுவில் இருந்து மின்னை உருவாக்கும் இயந்திரத்தை இயங்கச் செய்வது, பேருந்து நிலையத்தை பூங்காவாக மாற்றுவது, புகையிரத நிலைய வடிவமைப்பு, வழுக்கையாறு திட்டங்கள் என போர் நடந்து கொண்டிருந்த காலப் பகுதியிலும் அபிவிருத்தியையும் குறித்து சிந்தித்த ஓர் இனம் எங்களுடையது.

அதனை இப்போது நினைத்தாலும் புளாங்கிதமாக உள்ளது. நாங்கள் எங்களுடைய நிலம் சார்ந்து, சமூகம் சார்ந்து சிந்திக்கிற ஓர் இனமாக போராட்ட காலத்தில் இருந்தோம். மீளவும் இந்த நீர்க் கண்காட்சி சூழலைப் பார்க்கும் போது அதனை மீளவும் நினைவுபடுத்த வேண்டும்போல் இருந்தமை மிகவும் சிறப்பான விடயம். அதில், எனது பாடசாலை மாணவர்களும் பங்கு பற்றி இருக்கிறார்கள் என்பதில் மகிழ்வடைகிறேன்.

நீர் தொடர்பாக எனது பட்ட மேற்படிப்பில் உவர்நீர்த் தடுப்பணையை அமைப்பதால் எவ்வாறு நன்னீரை சேமிக்கக் கூடியதாக இருக்கும் என்பது தொடர்பில் ஆய்வு செய்திருக்கிறேன். அதன் நோக்கம் கடலில் வீணாக சென்று சேரும் மழை நீரை சேமித்தலாகும். நீங்கள் இங்கிருந்து நயினாதீவு, ஊர்காவற்றுறை செல்லும்போது தையில் இருந்து வைகாசி வரைக்கும் அந்த இடங்களில் மழை நீர் தேங்கியுள்ளதை அவதானிக்கலாம். அங்கிருந்த கிணறுகளில் உள்ள தண்ணீரை தொடர்ச்சியாக எடுத்துச் சென்று விஞ்ஞான பீட ஆய்வு கூடத்தில் ஆய்வு செய்தபோது அந்தக் காலப்பகுதிகளில் கிணறுகளில் உள்ள உவர் தன்மை குறைவாக இருப்பதை அவதானித்திருக்கிறேன்.

இன்னும் மேலதிகமாக மழை நீரை சேமிக்க உவர்நீர் தடுப்பணையின் உயரத்தை அதிகரிக்கலாமா? அல்லது ஆழத்தை கூட்டலாமா எனச் சிலர் கேட்பார்கள். இரண்டுமே செய்ய முடியாதிருக்கும். ஏனெனில், உவர் நீர் தடுப்பணையின் உயரத்தை கூட்டினால் நிலப் பகுதி வெள்ளக் காடாகிவிடும். ஏனெனில், நாங்கள் பல தாழ் நிலங்களில் வீடுகளை கட்டிருக்கிறோம், வீட்டு முற்றங்களிலும் கல் பதித்து தண்ணீர் உட்புகா வண்ணம் நிலத்தை முழுவதுமாக மூடி வருகிறோம். ஆழத்தைக் கூட்டுவோமாக இருந்தால் உவர் நீர் உள்ளே வந்துவிடும்.

இந்தக் கண்காட்சியில் மாணவர்களை ஈடுபடுத்தியமை சிறப்பான அம்சமாகும். ஏனெனில், அவர்கள்தான் இந்த விழிப்புணர்வை சமூகத்திடம் கொண்டு போய் சேர்க்கப் போகிறார்கள். கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சைகளில் அதியுயர் பெறுபேறுகளை பெறும் அநேகமான மாணவர்கள் சமூகமயப்படுத்தப் படாத மாணவர்களாக இருப்பதால் அவர்களால் எமது சமூகத்துக்கு பிரயோசனமில்லை. சிறந்த பெறுபேறுகளை பெறும் சமூக சிந்தனையுள்ள மாணவர்களால்தான் பாட சாலையின், சமூகத்தின் ஒட்டுமொத்த வெற்றி தங்கியுள்ளது. இந்தக் கருத்தை யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் தலைவரான ராஜேந்திரன் சுரேந்திரகுமாரன் அவர்களும் வலியுறுத்தி இருந்தமை மகிழ்ச்சியளிக்கிறது - என்றார். (ஐ-05)

# நல்லூர் சந்திரசேகர பிள்ளையார் ஆலயத்தில் சதுர்த்தி பெருவிழா!


யாழ்ப்பாணம், ஓக. 26

நல்லூர் வடக்கு சந்திர சேகரப் பிள்ளையார் ஆலய ஆவணி சதுர்த்தி பெருவிழா இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 6.15 மணிக்கு 1008 சங்காபிஷேகம், பஞ்சமுக பிள்ளையார் அர்ச்சனை, தீபாராதனைகள் நடைபெறும். மாலை 5 மணிக்கு மூலஸ்தான பூசையுடன் பெருவிழா ஆரம்பமாகும். தொடர்ந்து 6.30 மணிக்கு வசந்த மண்டப பூசை நடைபெற்று சுவாமி உள்வீதி, வெளி வீதி வலம் வருவார்.

இதேவேளை, மாலை 5.30 மணிக்கு ஆலய உள்மண்டபத்தில் சைவசமய அறிவுசார் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான சான்றிதழும் பரிசில்களும் வழங்கப்படும். விசேட நிகழ்வாக ஆலய அறநெறி பாடசாலை மாணவர்களின் வயலின், வீணை இசை நிகழ்வும் நடைபெறும். (ஐ)

# 400 ஆண்டு பழமையான சிவனாலய மகா கும்பாபிஷேகம் வெகுவிரைவில்



யாழ்ப்பாணம், ஓக. 26

400 ஆண்டுகள் பழமை வாய்ந்த வட்டுக்கோட்டை துணவி சிவன் ஆலய மகா கும்பாபிஷேகம் மிக விரைவில் நடைபெறவுள்ளது என்று யாழ்ப்பாணம் மரபுரிமை அமையம் தெரிவித்துள்ளது.

மிகத் தொன்மையான வழிபாட்டு தலமான துணவி சிவன் ஆலயம் பல ஆண்டு காலம் கவனிப்பாரின்றிக் காணப்பட்ட நிலையில் அதனை மீள் உருவாக்கம் செய்வதற்குரிய பணிகள் யாழ்ப்பாணம் மரபுரிமை அமையம் கடந்த பெப்ரவரி மாதம் யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் தலைவர் வாழ்நாள் பேராசிரியர் புஸ்பரட்ணம் அவர்களின் தலைமையில் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்தப் பணிகள் தற்போது இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளன. இதனால், ஆலய மகா கும்பாபிஷேகத்தை விரைவாக நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் வசிக்கும் பாலயோகஸ்தினி சிவயோகநாதன் இந்த ஆலயத்தை மீள உருவாக்குவதற்கான நிதி உதவியை வழங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பண்டாரவன்னியன் முல்லை கோட்டையை வெற்றிகொண்ட தினம் நினைவுகூரப்பட்டது

முல்லைத்தீவு, ஓக. 26

மாவீரன் பண்டாரவன்னியன் முல்லைத்தீவு கோட்டையை கைப்பற்றி வெற்றிபெற்று, 222ஆண்டுகள் நிறைவடைந்ததை முன்னிட்டு விசேட பெயர்ப் பலகை நேற்று திரைநீக்கம் செய்யப்பட்டது.

ஆங்கிலேயர் ஆட்சியில் இருந்த முல்லைத்தீவு கோட்டை, அந்நியப் படையெடுப்புகளை எதிர்த்து வீரப்போர் நடத்திய பண்டாரவன்னியன் தலைமையிலான படைகளால் 1803 ஓகஸ்ட் 25ஆம் திகதி கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டது.

இந்த நிகழ்வு இடம்பெற்று 222 ஆண்டுகள் நிறைவடைந்ததை முன்னிட்டு நேற்று மாவட்ட செயலாளர் அ. உமாமகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற விசேட நிகழ்வில் பண்டாரவன்னியனின் வெற்றியை குறிக்கும் பெயர்ப்பலகை திரைநீக்கம் செய்யப்பட்டது.

இந்நிகழ்வில் மேலதிக மாவட்ட செயலாளர் (நிர்வாகம்) சி.குணபாலன், மேலதிக மாவட்ட செயலாளர் (காணி) ஜெயகாந், பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் சற்குணேஸ்வரன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் ஜி.ஜெயரஞ்சினி உட்பட மாவட்ட செயலக அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

மாவட்ட செயலக வளாகத்தில் தற்போது அழிவடைந்த நிலையில் காணப்படும் முல்லைத்தீவு கோட்டையானது ஒல்லாந்தரால் கட்டப்பட்டதாகும். 1715ஆம் ஆண்டில் மரத்தால் இக்கோட்டை நிறுவப்பட்டது. 1721ஆம் ஆண்டில் நாற்பக்க வடிவில் இக்கோட்டை ஒல்லாந்தரால் கட்டப்பட்டது. பின்னர், பிரித்தானியரால் இந்தக் கோட்டை 1795ஆம் ஆண்டில் கைப்பற்றப்பட்டது. அடுத்து, 1803 ஓகஸ்ட் 25ஆம் திகதி பண்டாரவன்னியனால் இக் கோட்டை கைப்பற்றப்பட்டு இடிக்கப்பட்டமை வரலாற்றுப் பதிவாகிறது. (ஐ)

# சாவகச்சேரி நகர சபையின் வீதி திருத்த பணி ஆரம்பம்!

தென்மராட்சி, ஓக. 26

சாவகச்சேரி நகர சபையின் பேருந்து நிலைய வீதி, நடைபாதை என்பவற்றின் திருத்தப் பணிகள் உப தலைவர் ஞா. கிஷோரால் நேற்று சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

உபதவிசாளரின் நகரை அழகுபடுத்தும் திட்டத்துக்கு அமைய பேருந்து நிலைய வீதி மற்றும் வீதியோடு இணைந்த நடைபாதை என்பன திருத்தப்படவுள்ளன.

நேற்று நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில் நகராட்சி மன்ற உபதவிசாளர் ஞா. கிஷோர், தொழிலநுட்ப உத்தியோகத்தர், நகர முச்சக்கர வண்டி சங்கத்தினர், தனியார் சிற்றூர்தி சங்கத்தினர் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ-05)

# செப்ரெம்பர் முதலாம் திகதி யாழ். வருகிறார் ஜனாதிபதி

## பல்வேறு அபிவிருத்தி பணிகளை தொடக்கி வைப்பார்

யாழ்ப்பாணம், ஓக. 26

மண்டைதீவில் சர்வதேச துடுப்பாட்ட மைதானம் அமைப்பதற்கான ஆரம்ப நிகழ்வுகள் எதிர்வரும் மாதம் முதலாம் திகதி ஜனாதிபதியால் ஆரம்பித்து வைக்கப்படும் என்று போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று முன்தினம் வருகை தந்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், ஜனாதிபதியாக அநுர குமார திஸநாயக்க பதவியேற்று ஒரு வருடம் பூர்த்தியாவதை முன்னிட்டு பல்வேறு செயல்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. அவை வடக்கில் யாழ்ப்பாணத்தில் இருந்தே ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதற்காக எதிர்வரும் முதலாம் திகதி யாழ்ப்பாணம் வருகை தரவுள்ள ஜனாதிபதி மண்டைதீவில் அமைக்கப்படவுள்ள சர்வதேச துடுப்பாட்ட மைதானத்துக்கான ஆரம்ப நடவடிக்கைகளை தொடக்கி வைப்பார்.

அதனை தொடர்ந்து யாழ். மாவட்ட செயலகத்தில் கடவுசீட்டு, பணிமனையை திறந்து வைத்து, கடவுசீட்டு வழங்கும் பணிகளை ஆரம்பித்து வைப்பார்.

பின்னர், மயிலிட்டி இறங்கு துறை, யாழ்ப்பாண பொது நூலகம் என்பவற்றையும் பார்வை யிடுவார்.

மறுநாள் 02ஆம் திகதி முல்லைத்தீவுக்கு சென்று வட்டுவாகல் பால புனரமைப்பு பணிகளை ஆரம்பித்து வைப்பார். அத்துடன் தென்னை முக்கோண வலய செயல்திட்டத்தையும் தொடக்கி வைப்பார் - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
26.08.2025 செவ்வாய்க்கிழமை
விசுவாவசு வருடம், ஆவணி 10

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## ரணிலுக்கான தண்டனை உறுதியானால்...!

இன்றைய நிலையில் ரணில் விக்கிரமசிங்கதான் இலங்கை அரசியலில் விவாதப் பொருளாக இருக்கிறார். அவருக்கு எதிரான குற்றம் நிரூபிக்கப்பட்டு தண்டனை உறுதியானால் அடுத்த கட்டமாக இலங்கைத் தீவின் அரசியலில் என்ன நிகழும்? ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பிலான விடயங்களை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் விரைவுபடுத்தும். ரணிலுக்கு எதிரான விடயத்தில் வெற்றி பெற்றால் ராஜபக்ஷக்களே அவர்களின் அடுத்த இலக்காக இருப்பர் என்பதில் சந்தேகமில்லை. தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அனைத்தையும் சட்டத்தின் கீழ் மேற்கொள்ள முயற்சிக்கிறது. ரணில் விடயத்தில் அடுத்த கட்டமே அனைத்தையும் தீர்மானிக்கும்.

ராஜபக்ஷக்கள் தொடர்பில் குறிப்பாக, மகிந்த ராஜபக்ஷமீது சட்டத்தின் மூலம் கைவைப்பதற்கு எவ்வாறான சான்றுகள் இருக்கின்றன என்பது கேள்விக்குறிதான். ஆனால், அவருக்கு அடுத்த நிலையில் இருப்பவர்கள் இலக்காகலாம். ராஜபக்ஷ தரப்பைப் பொறுத்தவரையில் பஸில் ராஜபக்ஷவே முதல் இலக்காக இருந்திருப்பார். ஆனால், அவர் நாட்டில் இல்லாமையால் அடுத்த நிலையில் இருக்கும் எவரோ ஒருவர் இலக்கு வைக்கப்படலாம்.

ஆனால், அனைத்தும் ரணில் விவகாரத்தில்தான் தங்கியிருக்கிறது. ரணில் விடயத்தில் தீர்ப்பு ஒருவேளை அரசாங்கம் எதிர்பார்ப்பது போன்று இல்லாமல் இருந்தாலும்கூட, அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் இது இன்னொரு வகையான வெற்றியாகவே நோக்கப்படலாம். அதாவது, ரணிலையே கைது செய்திருக்கிறோம் ஏனையவர்களைக் கைது செய்வதில் எங்களுக்கு எந்தத் தயக்கமும் இல்லை என்பதான ஒரு தோற்றத்தை காண்பிப்பதற்கும் இது பயன்படக்கூடும். என்னதான் அரசியல் இல்லையென்று கூறினாலும் அனைத்துமே இறுதி அர்த்தத்தில் அரசியல்தான். அனைத்தும் அரசியல் நகர்வுகளுக்குத்தான் இறுதியில் பயன்படும்.

ரணிலைப் பொறுத்தவரையில் அவரின் அரசியல் வாழ்வில் இறுதியில் இருக்கும் ஒருவர். ஆனால், பதவியில்லாதபோதும் அவர் தொடர்ந்தும் இயங்கியவராகவே இருந்தார். ஒப்பீட்டடிப்படையில் முன்னாள் ஜனாதிபதிகளில் அதிகம் வெளியுலகில் பேசப்படும் ஒருவராக ரணில் மட்டுமே இருந்தார். இலங்கை அரசியல்வாதி என்னும் நிலையைக் கடந்து அவருக்கு சர்வதேச அளவில் இடமிருந்தது.

ஒருவேளை, நாடு மீண்டுமொரு நெருக்கடியை சந்தித்தால் நாட்டையார் மீட்பார் என்னும் கேள்விக்கான பதிலாக இலங்கைக்குள்ளும் வெளியிலும் ரணிலின் பெயரே முதலிடத்தில் இருந்தது. இதனை ஒரு பிரச்னையாக அரசாங்கம் நோக்குகிறதா - தெளிவான பதிலைக் கூற முடியாவிட்டாலும்கூட அரசியலில் எதற்கும் சாத்தியம் உண்டு.

நிலைமை எதுவாக இருந்தாலும்கூட ரணிலின் கைது விவகாரம் எதிரணி அரசியல்வாதிகள் முக்கியமாக, ராஜபக்ஷ முகாமில் இருந்தவர்களுக்கு கலக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பதில் ஐயமில்லை. இதேவேளை, ரணில் அதிகாரத்தில் இருக்கின்றபோது தேர்தல் நலன்களுக்காக தமிழ் அரசியல்வாதிகளும் தொடர்பில் இருந்திருக்கின்றனர். அந்தக் காலத்தில் பெறப்பட்டதாகக் கூறப்பட்ட மதுபானசாலை அனுமதிப்பத்திர விவகாரம் ஏற்கனவே பேசுபொருளாகியிருந்தது. இதேபோன்று, சில பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அபிவிருத்தி நிதி என்னும் பெயரில் அதிகமான ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டன என்றும் அப்போது தகவல்கள் வெளியாகியிருந்தன. இந்தப் பின்புலத்தில் நோக்கினால் ரணிலின் கைதால் சிங்கள அரசியல்வாதிகள் மட்டும் கலக்கமடையவில்லை மாறாக, தமிழ் அரசியல்வாதிகளும் கலக்கமடைந்திருக்கின்றனர்.

# மாற்றங்களுக்கு எங்களை தயார்படுத்த தவறுகிறோம்

### வடக்கு ஆளுநர் தெரிவிப்பு

வவுனியா, ஓக. 26

வடக்கு மாகாணத்திலுள்ள வளங்களைப் போன்று இலங்கையில் வேறு எந்த மாகாணங்களிலும் வளங்கள் இல்லை. ஆனால், எமது மாகாணத்திலுள்ள பல வளங்களை நாங்கள் இன்னமும் தொட்டுக்கூடப் பார்க்கவில்லை என்பதுதான் கசப்பான உண்மை. எதைச் செய்து வருகிறோமோ அதைத் தொடர்வதற்குத்தான் விரும்புகிறோமே தவிர மாற்றங்களுக்கு எங்களைத் தயார்படுத்த தவறுகிறோம் - இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

வவுனியா பல்கலைக்கழக வியாபார இணைப்பு அலகு மற்றும் முயற்சியாண்மை கற்கைநெறி மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட உலக முயற்சியாளர் தின நிகழ்வும் வர்த்தக சந்தையும் நேற்று நடைபெற்றது.

இதில், பிரதம விருந்தினராக பங்கேற்றபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், வடக்கில் 4 மாவட்டங்களில் மாவட்ட செயலராகப் பணியாற்றியிருக்கிறேன். நான் பணியாற்றிய மாவட்டங்களில் அதிகளவு வளங்களைக் கொண்ட மாவட்டமாக முல்லைத்தீவு மாவட்டமே இருக்கின்றது. ஆனால், வறுமையிலும் உச்சமான மாவட்டமாக அதுவே, இருக்கின்றது. எங்கள் வளங்களை நாங்கள் உரிய வகையில் பயன்படுத்தவில்லை என்பதுதான் இதனூடாகப் புலப்படுகின்ற உண்மை.

ஏன் எங்கள் மக்களை மாற்றக்கூடாது. நாங்களும் இலங்கையின் முதற்தர மாகாணமாக மாறவேண்டும். பொருளாதாரத்துக்கு அதிகூடிய பங்களிப்புச் செய்கின்ற மாகாணமாக மாறவேண்டும். அதற்குரிய அடித்தளங்களை அமைப்பதற்குரிய காலச்சூழல் இப்போதுள்ளது. இதைப்பயன்படுத்தி எங்கள் மக்களுக்குரியதை நாங்கள் பெற்றுக்கொடுக்க வேண்டும். அதைச் செய்யத் தவறுவது நாங்கள் எங்கள் மக்களுக்கு செய்யும் துரோகமாகும்.

போர் முடிந்த காலத்தில் எமது மாகாணத்தில் ஒன்றிரண்டு முயற்சியாளர்கள்தான் இருந்தார்கள். இன்று அது அதிகரித்திருக்கிறது. அன்று அவர்களின் உற்பத்திகளின் முடிவுகள் சிறப்பாக அமையவில்லை. ஆனால், இன்று சிறப்பாக உள்ளன. இதை இன்னும் விரிவாக்க வேண்டும்.

இவ்வாறான நிகழ்வுகள், கலந்துரையாடல்கள் எதிர்காலத்தில் எங்கள் மாகாணத்தை தன்னிறைவுள்ள மாகாணமாக மாற்றுவதற்கு உதவி செய்யட்டும் - என்றார். (ஐ)

# கிளிநொச்சி மருத்துவமனையின் பிரச்னைகளை கேட்டறிந்த சிறீதரன்



கிளிநொச்சி, ஓக. 26

கிளிநொச்சி பொது மருத்துவமனைக்கு நேற்று சென்ற சிறீதரன் எம்.பி, அங்கு நிலவும் குறைபாடுகள் மற்றும் பிரச்னைகள் தொடர்பில் நிர்வாகத்தினருடன் கலந்துரையாடினார்.


கிளிநொச்சி பொது மருத்துவமனையின் பெண் நோயியல், சிறப்பு மகப்பேற்று பிரிவை இயங்குநிலைக்கு கொண்டுவருதல், அந்தப் பிரிவுக்கான மருத்துவ உபகரண தொகுதிகளை வேறு மருத்துவமனைக்கு நகர்த்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று தெரிவிக்கப்படும் முறைப்பாடுகள் தொடர்பிலான உண்மைத் தன்மையை உறுதி செய்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இதன்போது மருத்துவமனை நிர்வாகத்தின ருடன் உரையாடினார்.

கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் அசேல திஸநாயக்க, உதவி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் துஷ்யந்தன், கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையின் மருத்துவ அத்தியட்சகர் மருத்துவர் பிரபாத், உதவி மருத்துவ அத்தியட்சகர் மருத்துவ தயாளினி, மகப்பேற்று நிபுணர் மருத்துவர் சுதர்சன் ஆகியோருடன் கலந்துரையாடினார்.

இதன்போது, பெண் நோயியல் மற்றும் சிறப்பு மகப்பேற்று பிரிவை இயக்குவதிலுள்ள தடைகள், ஆளணி மற்றும் மேலதிக ஆளணி நியமனம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டன. அத்துடன், அங்குள்ள உபகரணத் தொகுதிகளை வெளியிடங்களுக்கு நகர்த்துவது தொடர்பில் தமது மட்டத்தில் எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அவ்வாறான முயற்சிகளுக்கு தாம் ஒருபோதும் உடன்படப்போவதில்லை என்றும் அதிகாரிகள் கூறியிருந்தனர்.

இதேசமயம், குறித்த பிரிவை இயக்குவதற்கான ஆளணி நியமனம் தொடர்பில் கடந்த 2025.05.29 ஆம் திகதி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் தன்னால் பிரேரணை முன்வைக்கப்பட்டிருந்ததை சுட்டிக்காட்டிய சிறீதரன், 40 தாதியர்கள் உள்ளிட்ட 146 வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பில் சுகாதார அமைச்சின் கவனத்தைக் கோருவதன் மூலம் தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் குறிப்பிட்டிருந்தார். (ஐ-05)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓகஸ்ட் - 26 செவ்வாய்க்கிழமை
விசுவாவசு வருடம் - ஓகஸ்ட் 10
நல்ல நேரம் : 07.31 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : திருதியை




**மேடம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற்கொள்வீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் தேடி வரும். கனவு நனவாகும் நாள்.

**இடபம்**
திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் அலைச்சல் ஏற்படும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் நிம்மதி கிட்டும். எதிர்பாராத உதவி கிட்டும் நாள்.

**மிதுனம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். துணிச்சலுடன் செயல்பட வேண்டும் நாள்.

**கடகம்**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். பழைய பிரச்னைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள். மனசாட்சி படி செயல்படும் நாள்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் முக்கிய அலுவல்களை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே முடிப்பது நல்லது. அதிகாரிகள் குறைக் கூறுவார்கள். பேச்சில் இங்கிதம் தேவைப்படும் நாள்.

**கன்னி**
பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். வெளி உணவுகளை தவிர்ப்பது நல்லது. உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் விவாதம் வேண்டாம். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**துலாம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் ரசனையைப் புரிந்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் புது பொறுப்புகளை ஏற்பீர்கள். மதிப்புக் கூடும் நாள்.

**விருட்சிகம்**
சொந்த பந்தங்கள் சிலர் கேட்ட உதவியை செய்வீர்கள். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். உத்தியோகத்தில் அதிகாரிகள் முன்வைத்த கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள். சாதிக்கும் நாள்.

**தனுசு**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். நன்மைகள் நடக்கும் நாள்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்களை கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. வேலைச்சுமை மிகுந்த நாள்.

**கும்பம்**
பிள்ளைகள் உங்கள் பேச்சிற்கு மதிப்பளிப்பார்கள். வியாபாரத்தில் வேலையாட்களின் ஆதரவு கிடைக்கும். உத்தியோகத்தில் தைரியமாக முடிவுகள் எடுப்பீர்கள். நன்மை கிட்டும் நாள்.

**மீனம்**
சமயோசிதமாகவும் சாதுர்யமாகவும் பேசி காரியம் சாதிப்பீர்கள். அதிகார பதவியில் இருப்பவர்களின் அறிமுகமும் கிடைக்கும். வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். அமோகமான நாள்.

# ஊழல் செய்ததால் ரணில் கைதானார்: அரசியல் பின்னணிக்கு இடமில்லை


## பாராளுமன்ற உறுப்பினர் ஜெகதீஸ்வரன்

வவுனியா, ஓக. 26

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செய்த ஊழலுக்காக கைது செய்யப்பட்டுள்ளாரே தவிர அதில் எந்தவிதமான அரசியல் பின்னணிகளும் கிடையாது என்று வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ம. ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

"ஊழல் - மோசடிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்போம் என்று தேசிய மக்கள் சக்தியின்



தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டிருந்தது.

அந்த வகையில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செய்த ஊழலுக்காக கைது செய்யப்பட்டுள்ளாரே தவிர அதில் எந்தவிதமான அரசியல் பின்னணிகளும் பழிவாங்கல்களும் கிடையாது.

நீதியான முறையில் விசாரணைகள் இடம்பெற்று சாட்சியங்களின் அடிப்படையில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார். ஜனாதிபதிக்கும் சாதாரண மக்களுக்கும் இலங்கையில் நீதி ஒன்றுதான் என்பதை மக்கள் உணர்ந்துள்ளனர்.

இந்தக் கைதானது நாட்டு மக்களுக்கு ஒரு செய்தியை கூறியுள்ளது. தேசிய மக்கள் சக்தி அரசில் யார் ஊழல் - மோசடிகளில் ஈடுபடுகின்றார்களோ? அவர்கள் எந்தவித தராதரமும் பார்க்கப்படாமல் நீதியின் முன் நிறுத்தப்படுவார்கள் என்பதற்கு ரணிலின் கைதை உதாரணமாகக் கொள்ளலாம்"- என்றார்.

(எ-10)

# யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தின் குமாரபதி மனைத் தொகுதி திறப்பு

யாழ்ப்பாணம், ஓக. 26

யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் குமாரபதி மனைத் தொகுதி திறப்பு விழா சங்கத்தின் தலைவர் எஸ். வை. சுதாகரன் தலைமையில் நேற்று முன்தினம் உசன் கிராமத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனும் சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி, பேராசிரியர் சிவசுப்பிரமணியன் ரகுராமும் கௌரவ விருந்தினர்களாக கிராம உ த்தியோகத்தர்கள் அழகராஜா பிரதீபனும் திருமதி சியோசினி செந்தூரனும் பங்குபற்றினர்.



நன்கொடையாளர்கள் உதவி மூலம் 05 மனைகள் நிர்மாணிக்கப்பட்டு, பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன.

(எ)

# திருவிளையாடல் புராணச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஓக. 26

தெல்லிப்பழை மாவைகலட்டி அருள்மிகு நாகதம்பிரான் தேவஸ்தானத்தில் சைவ வாழ்வியலில் திருவிளையாடல் புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் நடத்தும் வாராந்தத் திருவிளையாடல் புராணச் சிறப்புச் சொற்பொழிவு தொடர் 20 எதிர்வரும் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை

மாலை 04.00 மணிக்கு நடைபெறவுள்ளது. பரஞ்சோதிமுனிவர் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலை நிகழ்வும் சைவப்புலவர் பொன். சந்திரவேல் "விருத்த குமாரபாலரண படலம்" என்னும் விடயப்பொருளில் நிகழ்த்தும் சொற்பொழிவும் நடைபெறவுள்ளது.

சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

(எ)

# பனைசார் கைப்பணி பயிற்சியாளர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் கண்காட்சியும்

யாழ்ப்பாணம், ஓக. 26

பனைசார் கைப்பணி பயிற்சியாளர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் கண்காட்சியும் யாழ். சரஸ்வதி மண்டபத்தில் கடந்த 23 ஆம் திகதி நடைபெற்றது.

பனை அபிவிருத்தி சபைத் தலைவர் ரவீந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், பனை அபிவிருத்தி சபை அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது, அமைச்சர் சந்திரசேகர் பனைசார் கைப்



பணி பயிற்சியாளர்களுக்கான சான்றிதழை வழங்கி வைத்ததோடு, கண்காட்சியையும் பார்வையிட்டார்.

(எ-03)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வாதிகாரத்துக்கு எதிராக சகலரும் ஒன்றுபடவேண்டும்!

## சாகர காரியவசம் கோரிக்கை

கொழும்பு, ஓக. 26

**முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டதை வன்மையாகக் கண்டிக்கிறோம். முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நேர்ந்த கதி நாளை பிறிதொருவருக்கு ஏற்படலாம். ஆகவே சர்வாதிகாரத்துக்கு எதிராக அனைவரும் ஒன்றுபட வேண்டும் என பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.**

கொழும்பில் நடைபெற்ற எதிர்க்கட்சிகளின் ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-முன்னாள் ஜனாதிபதிகளை பழிவாங்கும் நோக்கில் வெறுப்புக்களை மாத்திரம் முன்னிலைப்படுத்தி ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க செயற்படுகிறார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை கைது செய்வதற்கு அரசாங்கம் முறையான நடவடிக்கைகளை மேற்கொண்டதா என்பதில் பாரிய சந்தேகம் காணப்படுகிறது.

பொலிஸ் சேவையில் இருந்து ஓய்வு பெற்று பின்னர் மக்கள் விடுதலை முன்னணியுடன் ஒன்றிணைந்து செயற்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் அமைச்சரவையின் அனுமதியுடன் மீண்டும் பொலிஸ் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டார். இந்த நபரின் தேவைக்காகவே முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் கொள்கை தொடர்பில் எம்மிடம் மாறுபட்ட நிலைப்பாடு இருக்கலாம். இருப்பினும் ஜனநாயகத்துக்கு எதிரான செயற்பாடுகள் தலைதூக்கும் போது அதற்கு அனைவரும் ஒன்றிணைந்து எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும். ஜனநாயகத்தை பாதுகாக்கவே நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்துள்ளோம்.

06 மாத காலத்துக்குள் நாட்டை முன்னேற்றுவதாக மக்களுக்கு வாக்குறுதியளித்து ஆட்சிக்கு வந்த அரசாங்கம் மக்களுக்கு வழங்கிய அடிப்படை வாக்குறுதிகளை மறந்துவிட்டு அரசியல் பழிவாங்கலை மாத்திரம் முன்னிலைப்படுத்தி செயற்படுகிறது. அரசாங்கத்தின் குறைகளை சுட்டிக்காட்டுபவர்களை முடக்கி சர்வாதிகாரமான முறையில் ஆட்சியியலை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டதை வன்மையாகக் கண்டிக்கிறோம். முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நேர்ந்த கதி நாளை பிறிதொருவருக்கு ஏற்படலாம். ஆகவே சர்வாதிகாரத்துக்கு எதிராக அனைவரும் ஒன்றுபடவேண்டும்-என்றார். (அ)

## விகாரையில் தேங்காய் உடைத்து ரணிலின் கைதுக்கு குழு எதிர்ப்பு!

கொழும்பு, ஓக. 26

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் விகாரை ஒன்றில் தேங்காய் உடைத்து இறைவழிபாடு ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் பொதுஜன பெரமுன ஆகியவற்றின் பிரதேச சபை உறுப்பினர்கள், முன்னாள் உறுப்பினர்கள் உள்ளிட்ட தரப்பினர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இதனிடையே முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங் கவிற்காக, பெருந்தோட்ட பகுதிகளில் நாளை முதல் விசேட பூசை வழிபாடுகள் நடைபெறவுள்ளன.

கொழும்பு தேசிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் ரணில் விக்கிரமசிங்க விரைவாக குணமடைவதற்காக வேண்டி பெருந்தோட்ட பகுதிகளில் உள்ள ஆலயங்களில் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் ஏற்பாட்டில் பூசை வழிபாடுகள் நடைபெறவுள்ளன. (அ)

## ஜனாதிபதி அநுரகுமாரவுக்கு உக்ரைன் ஜனாதிபதி நன்றி!

கொழும்பு, ஓக. 26

உக்ரைனின் சுதந்திர தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் அன்பான வாழ்த்துக்களுக்கு உக்ரைன் ஜனாதிபதி விளாடிமிர் ஜெலென்ஸ்கி தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துள்ளார்.

சமூக ஊடகத் தளமான எக்ஸ் தளத்தில் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி,இலங்கையின் தொடர்ச்சியான ஆதரவுக்கு நன்றி தெரிவித்ததோடு, இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவை வலியுறுத்தினார்.

"உக்ரைனின் சுதந்திர தினத்தன்று அன்பான மற்றும் நேர்மையான வாழ்த்துக்களுக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு நான் நன்றி கூறுகிறேன். பரஸ்பர மரியாதை மற்றும் அமைதி, செழிப்புக்கான பகிரப்பட்ட அர்ப்பணிப்பின் அடிப்படையில் இலங்கையுடனான நட்புறவுகள் மற்றும் ஒத்துழைப்பை உக்ரைன் மதிக்கிறது. இரு நாடுகளுக்கும் நன்மைகளைத் தரும் வகையில், எங்கள் உறவுகள் மேலும் வளர்ச்சியடையும் சாத்தியக் கூறுகளைக் கொண்டுள்ளன என நாங்கள் நம்புகிறோம்," என தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுர குமார உக்ரைன் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில், உக்ரைன் மக்களுக்கு சுதந்திர தின வாழ்த்துக்களைத் தெரிவித்து, இரு தரப்பு உறவுகளை ஆழப்படுத்துவதற்கான இலங்கையின் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளார். (அ)

## அனைத்து கட்சி உறுப்பினர்களும் ஒன்றிணைந்து ஜனநாயகத்தை நிலைநாட்டப் போராடவேண்டும்

கொழும்பு, ஓக. 26

தனது கட்சியினரும், சில முக்கிய எதிர்க்கட்சி உறுப்பினர்களும், இந்த நேரத்தில் ஒற்றுமையாக இருந்து ஜனநாயகம் நிலைநாட்டப்படுவதை உறுதி செய்ய போராடவேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு சென்றிருந்த மூத்த அரசியல்வாதிகளிடம் அவர் இதனை குறிப்பிட்டுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று கூறுகிறது.

அனைத்து எதிர்க்கட்சிகளுக்குள்ளும் ஒற்றுமையை வலியுறுத்திய ரணில் விக்கிரமசிங்க, அரசியல் வேறுபாடுகளை ஒதுக்கி வைக்குமாறு அனைவரையும் கேட்டுக் கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீரிழப்பு மற்றும் உயர் இரத்த அழுத்தங்களுக்காக சிகிச்சை பெற்று வரும் ரணில் விக்ரமசிங்க, தொடர்ந்து மருத்துவமனையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெறுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில கட்சித் தலைவர்கள் நேற்று முன் தினம் பிற்பகல் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவையும் சந்தித்து எதிர்க்கட்சியினரின் முனைப்புக்களுக்காக அவரது ஆதரவைக் கோரினர்.

இதனையடுத்து, நேற்று முன்தினம் மாலை ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் கொழும்பில் இந்திய தூதுவர் சந்தோஷ் ஜாவை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

சில முக்கிய சர்வதேச மனித உரிமைக் குழுக்களும் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களைத் தொடர்பு கொண்டு விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டதற்கான விவரங்களைக் கேட்டறிந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## பொரளை துப்பாக்கிச் சூடு; இருவர் கைது

கொழும்பு, ஓக. 26

பொரளை, காதர்நானா பகுதியில் கடந்த 22 ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச் சூடு சம்பவத்துக்கு உதவியதாக சந் தேகிக்கப்படும் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட் டுள்ளனர்.

வெல்லம்பிட்டி பகுதியில் பொரளை பொலிஸாரால் சந்தேக நபர்கள் கைது செய்யப் பட்டனர்.

துப்பாக்கிச் சூட்டுக்குப் பயன்படுத்தப்பட்டதாக கூறப் படும் மோட்டார் சைக்கிளை யும் பொலிஸார் இதன்போது பறிமுதல் செய்துள்ளனர்.

கைதான சந்தேக நபர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## பாராளுமன்ற எரிபொருள் கொடுப்பனவை பெறுவதற்கு மறுத்த பிரதமர், அமைச்சர்கள்

கொழும்பு, ஓக. 26

பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய உட்பட 45 அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள், பாராளுமன்றத்தால் வழங்கப்படும் எரிபொருள் கொடுப்பனவை பெறமாட்டார்கள் என பாராளுமன்ற செயலாளர் நாயகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுக்கள் தாங்கள் பணிபுரியும் அமைச்சுக்களிலிருந்து எரிபொருள் கொடுப்பனவைப் பெறுவதால், பாராளுமன்றத்தால் வழங்கப்படும் எரிபொருள் கொடுப்பனவை பெறாதிருக்க தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, பிரதமர் ஹரிணி அமரசூரிய, பாராளுமன்றத்திலிருந்து கிடைக்கவேண்டிய எரிபொருள் கொடுப்பனவைப் பெறமாட்டார் என்று முதலில் பாராளுமன்றச் செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர விடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, ஏனைய அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களுக்கு எரிபொருள் கொடுப்பனவு கிடைக்காது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை நிலவரப்படி, 45 அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் தொடர்புடைய கடிதங்களை சமர்ப்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

## வர்த்தக அமைச்சருக்கு எதிரான வழக்கில் அதிகாரிகளை மன்றில் கண்டித்த நீதிவான்

கொழும்பு, ஓக. 26

வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க தொடர்புடைய வழக்கு ஒன்றின் உள்ளடக்கங்கள் விசாரணை முடிவதற்கு முன்னரே சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டதை நீதிமன்றம் கண்டித்துள்ளது.

இந்த விடயத்தில் கொழும்பு மோசடிப் பணியகத்தின் அதிகாரிகளை கல்கிஸ்ஸை நீதவான் ஏ.டி. சதுரிகா டி சில்வா கண்டித்துள்ளார்.

குறித்த ஆவணங்களை சட்டமா அதிபருக்கு அனுப்புவதற்கு அதிகாரிகள் ஏன் அவசரம் காட்டவேண்டும் என்று நீதிவான் இதன்போது கேள்வி எழுப்பியுள்ளார்.

முழுமையடையாத ஆவணங்களை சட்டமா அதிபருக்கு அனுப்புவது வழக்கை தாமதப்படுத்தும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய தொழிலாளர் நிறுவனம் என்று அழைக்கப்படும் அமைப்புக்கு சொந்தமான கட்டடம் தொடர்பான வழக்கு கல்கிஸை நீதிமன்றில் விசாரிக்கப்பட்டு வருகிறது.

இந்த வழக்கு தேசிய தொழிலாளர் நிறுவனத்துக்குச் சொந்தமான ஒரு கட்டடத்தைப் பற்றியது.

தேசிய தொழிலாளர் காங்கிரஸின் அதிகாரிகள் என்று காட்டிக் கொண்டு, சமரசிங்க உள்ளிட்டவர்கள் மோசடியாக 3.6 மில்லியன் ரூபாய்களுக்கு குறித்த கட்டடத்தை குத்தகைக்கு எடுத்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, வழக்கில் அமைச்சர் சமரசிங்க மற்றும் பிறரை சந்தேக நபர்களாக பெயரிடுமாறு பாதிக்கப்பட்ட தரப்பினர் விடுத்த கோரிக்கை தொடர்பான உத்தரவை, நீதிவான் செப்ரெம்பர் 26 ஆம் திகதி வரை ஒத்திவைத்தார். (அ)

## வைத்தியசாலையில் ரணிலுக்கு உயர்மட்டப் பாதுகாப்பு ஏற்பாடு!

கொழும்பு, ஓக. 26

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். சிறைச்சாலைகள் திணைக்களத்தால் அவருக்கு உயர்மட்ட பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளன.

வைத்தியசாலை வளாகத்துக்குள் ரணில் விக்கிரமசிங்கவின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக ஏழு சிறைக்காவலர்கள் மற்றும் நான்கு சிறைச்சாலை பாதுகாப்பு அதிகாரிகள் பணிய மர்த்தப்பட்டுள்ளதாக சிறைச்சாலை செய்தித் தொடர்பாளர் ஜகத் வீரசிங்க உறுதிப்படுத்தினார்.

சிறைச்சாலை வைத்தியசாலையின் வைத்திய அதிகாரிகளும் அவரது உடல்நிலையை உன்னிப்பாகக் கண்காணித்து வருகின்றனர்.

தேசிய வைத்தியசாலையின் துணை இயக்குநர் வைத்தியர் ருக்ஷன் பெல்லன்ன, முன்னாள் ஜனாதிபதியின் உடல்நிலையை வழமைக்கு கொண்டு வருவதில் தீவிர சிகிச்சைப் பிரிவின் சிறப்புக் குழு ஒன்று ஈடுபட்டுள்ளதாகத் தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் யாராவது நடந்தால் சட்ட நடவடிக்கை!

## ரில்வின் சில்வா எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 26

**நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் யாராவது நடந்து கொண்டால் சட்டம் அதற்கேற்ற நடவடிக்கையை எடுக்கும் என மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.**



முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தொடர்பான நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து பேரணி நடத்தப்பட்டால் அது நாட்டின் நீதித்துறைக்கு எதிரானது என அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-ஏதேனும் ஒரு குற்றச்சாட்டின்பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டால் நீதிமன்றம் அது தொடர்பில் விசாரித்து தேவை இருந்தால் அவருக்கு பிணை வழங்கும்.

இல்லையேல், அவர் சிறையில் தனது காலத்தை செலவிட வேண்டியிருக்கும்.

அதுதான் சட்டத்தின் வழி.

இதேவேளை, ரணிலுக்காக கூடிய அரசியல்வாதிகளின் குழு, கடந்த காலங்களில் அவரை சிறையில் அடைக்க வேண்டும் என வலியுறுத்தியது.

2019 ஜனாதிபதித் தேர்தலின்போதும் ரணிலை சிறைக்கு அனுப்ப விரும்புவதாக ராஜபக்ஷ குழு கூறியது.ரணிலுக்காக கூடியவர்களில் தொண்ணூறு வீதம் பேர் மீது வழக்குகள் உள்ளன.

குற்றங்களைச் செய்தவர்கள் இப்போது குற்றங்களிலிருந்து தப்பிக்க ஒன்று கூடுகின்றார்கள்.

அனைத்து குற்றவாளிகளும் ஒன்று கூடிவிட்டார்கள் என்பதை மக்கள் எளிதாகப் புரிந்துகொள்வார்கள்.

ஜனாதிபதிகள் முதல் பொலிஸ் மா அதிபர் வரை சட்டம் அனைவருக்கும் பொருந்தும்-என்றார். (அ)

# கண்டி வைத்தியசாலையில் 600 வாகனங்களை நிறுத்தக்கூடிய மாடி கட்டடம் அமைக்க திட்டம்!

கொழும்பு, ஓக. 26

கண்டி தேசிய வைத்தியசாலையில் 600 வாகனங்கள் நிறுத்தி வைக்கக்கூடிய நான்கு மாடிகளைக் கொண்ட கட்டடம் ஒன்று அமைக்கப்பட உள்ளதாக வைத்தியசாலைப் பணிப்பாளர் இரேசா பெர்னான்டோ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-தற்போது கண்டி தேசிய வைத்தியசாலையில் பல்வேறு துறைகளிலும் பணியாளர்களாக சுமார் 6,800 பேர் கடமையாற்றுகின்றனர்.

அத்துடன், நோயாளர்களுக்காக வரும் வாகனங்களும் சேர்ந்து பாரிய வாகன நெரிசலை ஏற்படுத்துகின்றன.

பணியாளர்களது வாகனங்களைக் கூட நிறுத்தி வைப்பது பாரிய பிரச்னையாக இருக்கிறது.

எனவே இது விடயமாக சுகாதார அமைச்சு மேற்படி நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

கண்டி வைத்தியசாலைக்குரிய காணிகளை நீண்ட காலமாக சட்டவிரோதமாக சில தனி நபர்கள் கையகப்படுத்திக் கொண்டிருப்பதால் வைத்தியசாலை நிர்வாகத்துக்கு அதுவும் ஒரு பாரிய சவாலாக இருக்கிறது.

வைத்தியசாலையின் பிரதான வாயிலில் ஏற்பட்டு வரும் நெரிசல் காரணமாக உள்வரும் அவசர நோயாளர்கள்கூட சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

நோயாளர் காவு வண்டிகள் கூட உள்வருவதில் சிரமங்களை எதிர்கொள்கின்றன. எனவே முதற்கட்டமாக நான்கு மாடிக் கட்டடத்தில் இரண்டு மாடிகளையாவது துரித கதியில் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன-என்றார். (அ)

# ரணில் தொடர்பான நீதிமன்ற உத்தரவை விமர்சிப்பதனால் சிக்கல் நிலை ஏற்படும்!

## திசைகாட்டி சட்டத்தரணிகள் எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 26

முன்னாள் ஜனாதிபதி ரணிலுக்கு கோட்டை நீதவான் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை விமர்சிப்பது தொடர்பாக தேசிய மக்கள் சக்தியின் சட்டத்தரணிகள் அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

தேசிய மக்கள் சக்தி சட்டத்தரணிகள் அமைப்பு விசேட ஊடக சந்திப்பை நடத்தி இந்தக் கருத்தை வெளியிட்டது.

பாராளுமன்றத்துக்கு வெளியே இந்த உத்தரவை விமர்சிக்கும் வகையில் அறிக்கைகள் வெளியிடப்பட்டால், அது நீதிமன்ற அவமதிப்புக்கு சமமாகிவிடும் என்று சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

மேலதிகமாக இதுபோன்ற அறிக்கைகள் பொதுமக்களிடையே அமையின்மையை ஏற்படுத்தினால், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு பிணை வழங்கப்படாமல் இருப்பதற்கு அது ஒரு காரணமாக இருக்கலாம் என்றும் அவர்கள் தெரிவித்தனர். (அ)

# ரணிலின் கைது குறித்து முன்கூட்டியே கருத்து வெளியிட்டவர் குறித்து விசாரணை ஆரம்பம்!

கொழும்பு, ஓக. 26

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்படுவதற்கு முன்பே அவர் விரைவில் கைதுசெய்யப்படுவார் என கருத்து வெளியிட்ட யூரியூபர் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறியமுடிகிறது.

குறித்த யூரியூபர் குறித்து ஐக்கிய தேசியக் கட்சி அளித்த முறைப்பாட்டுக்கு அமைய இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு வாக்குமூலம் வழங்க வரும் போது கைதுசெய்யப்படுவார் என குறித்த யூரியூபர் அவருடைய காணொளியில் குறிப்பிட்டிருந்தார்.

ரணில் விக்கிரமசிங்கவின் கைது நடவடிக்கையை அடுத்து இந்த விடயம் பல்வேறு தரப்பினராலும் விமர்சிக்கப்பட்டு வந்தது.

இதையடுத்து குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டை விசாரணை அதிகாரிகள் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரியவுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் பொலிஸ் ஊடகப்பேச்சாளரை தொடர்பு கொண்டபோது, இந்த விடயம் தொடர்பான விசாரணையை புலனாய்வுப் பிரிவிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிட்டார். (அ)

# பாராளுமன்றுக்கு தீ வைக்கச் சென்றோர் ரணிலை கைது செய்தது நகைப்புக்கிடம்!

## கூறுகிறார் சம்பிக்க ரணவக்க

கொழும்பு, ஓக. 26

பாராளுமன்றத்துக்கு தீ வைப்பதாக வீதிக்கு இறங்கிய கட்சியினர், பொதுச் சொத்து பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை கைது செய்திருப்பது நகைப்புக்குரிய விடயமாகும் என ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

கொழும்பில் எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து நடத்திய ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு அவர், இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-தற்போதைய ஜனாதிபதிக்கு, நிதியமைச்சர் என்ற வகையில் குற்றச்சாட்டு ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது. துறைமுகத்தில் இருந்து விடுவிக்கப்பட்ட கொள்கலன்கள் தொடர்பில் கணக்காய்வு விசாரணையை நடத்துமாறு நிதியமைச்சின் பரிசீலனை குழு யோசனை ஒன்றை முன்வைத்தது.

எனினும் இதுவரை அதற்கான எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இவ்வாறான சூழலில் நீதி அனைவருக்கும் சமம் என்ற காரணத்தை காட்டிலும் இது நேரடியான அரசியல் பழிவாங்கல் செயற்பாடு என்பதைக் காணமுடிகின்றது.

ஜனாதிபதி அண்மைக் காலத்தில் பல விஜயங்களை மேற்கொண்டிருந்தார். அந்த விஜயங்களில் சந்தித்து கலந்துரையாடிய நிறுவனங்களுக்கு ட்ரில்லியன் அளவிலான வரிச் சலுகையினை வழங்கியிருந்தார். இதனை எவ்வாறு பார்க்க முடியும். ஜனாதிபதி தமது தனிப்பட்ட விஜயத்தில் பொதுச் சொத்தை பயன்படுத்தவில்லையா?

1982 ஆம் ஆண்டு கொழும்புத்துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டிருந்த ஈரானுக்கு சொந்தமான கப்பலுக்கு தீ வைத்த சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டை எதிர்கொண்ட கட்சியாகும் (ஜே.வி.பி), 1987 - 1989 வரையான காலப்பகுதியில் விசாலமான சொத்துக்களை அழித்தமை குறித்த குற்றச்சாட்டை பெருமையாக ஏற்றுக்கொண்ட கட்சியினராக அவர்கள் உள்ளார்கள்.

இறுதியாக 2022 ஆம் ஆண்டு ஜூலை மாதம் பாராளுமன்றை தீ வைப்ப தற்காக வீதிக்கு இறங்கிய கட்சி, பொதுச் சொத்துக்களை பாது காக்கும் சட்டத்தின் ஊடாக முன்னாள் ஜனாதிபதியை கைது செய்திருப்பது பாரிய நகைச்சு வைக்குரிய விடயமாகவே கருதமுடியும்-என்றார்.

# ரணிலின் கைது அரசியல் பழிவாங்கல் கிடையாது!

## அமைச்சர் ஆனந்த விஜேபால

கொழும்பு, ஓக. 26

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கைது அரசியல் பழிவாங்கல் அல்ல என்றும், அது நீதிமன்றத்தின் சுயாதீனச் செயற்பாடு என்றும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கைது தற்போது பெரும் பேசுபொருளாக மாறியுள்ள நிலையில், அது குறித்து பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபாலவிடம் வினவியபோதே அவர் இதனை கூறினார்.

யாரையும் கைது செய்வதா? அல்லது அவரை விளக்கமறியலில் வைப்பதா? என்பது குறித்து தானோ அல்லது அரசாங்கமோ தீர்மானிப்பது இல்லை எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், எதிர்த்தரப்பினர் அனைவரும் ஓர் அணியில் இணைவார்கள் என்பதை அறிந்திருந்த நிலையில், குறித்த கூட்டணியால் அரசாங்கத்துக்கு எவ்வித சவாலையும் ஏற்படுத்த முடியாது என்றும் அவர் கூறினார்.

யாரேனும் ஒருவருக்கு எதிராக விசாரணைகள் இடம்பெறுமாயின் அது தொடர்பான அடுத்தக்கட்ட நடவடிக்கைகளை குற்றப்புலனாய்வுத் திணைக்களம் எடுக்கும் என்றும் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

அத்துடன், இங்கு யாருடைய ஜனநாயக உரிமையும் பறிக்கப்படவில்லை எனக் கூறிய அமைச்சர், ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நீதிமன்றத்தில் இடம்பெற்ற விசாரணைகளுக்கு அமையே விளக்க மறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றும் அமைச்சர் ஆனந்த விஜேபால வலியுறுத்தியுள்ளார்.

# ஆடைகள் உற்பத்தி செய்ய மிகவும் விலை உயர்ந்த இடமாக இலங்கை!

கொழும்பு, ஓக. 26

இலங்கையின் ஆடை உற்பத்திகளுக்கு இங்கிலாந்துக்குள் வரிகள் பூச்சியமாக இருந்தாலும் உலகளாவிய ரீதியில் ஆடைகளை உற்பத்தி செய்வதற்கான மிகவும் விலையுயர்ந்த இடமாக இலங்கை தனித்து நிற்பதாக சந்தை தரப்புக்கள் தெரிவித்துள்ளன. தற்போதைய நிலையில் பங்காளதேஷ் மற்றும் வியட்நாம் போன்ற நாடுகள் இலங்கையை விட குறைந்த உற்பத்திச் செலவுகளில் ஆடைகளை உற்பத்தி செய்கின்றன.

எனவே இது இலங்கையை மற்ற சந்தைகளுடன் போட்டித்தன்மைக்கு உட்படுத்தியுள்ளதாக கூட்டு ஆடை சங்க மன்றத்தின் பேச்சாளர் யோஹான் லோரன்ஸ் தெரிவித்துள்ளார்.

முன்னதாக இலங்கை உட்பட்ட அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் வர்த்தகத் திட்டத்தின் கீழ் தாராளமய மாக்கப்பட்ட விதிகளை இங்கிலாந்து அறிவித்துள்ளது.

இது 2026 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் நடைமுறைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இங்கிலாந்தின் இந்த சீர்திருத்தம், இலங்கை உற்பத்தியாளர்களுக்கு இங்கி லாந்து சந்தைக்குள் வரி இல்லாத அணுகலை தொடர்ந்தும் வழங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிரணியினர் சகலருமே ரணிலின் நண்பர்கள் என்பது நிரூபணமானது

## வசந்த முதலிகே தெரிவிப்பு

கொழும்பு, ஒக. 26

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கரமசிங்க கைதை யடுத்து சகல எதிரணி உறுப் பினர்களும் ஆதரவாளர்களும் ஒன்றிணைந்ததன் மூலம் அவர்கள் அனைவரும் ஒரே கொள்ளை உடையவர்கள், நண்பர்கள் என்பதை நாட்டு மக்களுக்கு காட்டியுள்ளனர் என மக்கள் போராட்ட அமைப்பின் நிறைவேற்றுக்குழு அங்கத்தவர் வசந்த முதலிகே தெரிவித்தார்.

மக்கள் போராட்ட அமைப் பின் பேரணி ஒன்றை கண்டி யில் ஆரம்பித்து வைத்த பின்பு ஊடகங்களுக்கு கருத்து வெளி யிடும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-ரணில் விக்கிரமசிங்கவை சரியாகவும் பிழையாகவும் விமர்சித்தவர்கள் எல்லோரும் அவருடன் இணைந்ததை காண முடிந்தது.

இதன் மூலம் அவர்கள் அனைவரும் ஒத்த தன்மை யுடையவர்கள், நண்பர்கள் என்பதையே காட்டினர்.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்ததில் தவறு இல்லை. அது எடுக்க வேண்டிய விடயம்.

ஆனால் ஒரு சாதாரண விடயத்திற்காகவே நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனைவிட கடுமையான பல விடயங்கள் உள்ளன. உயிர்த்த ஞாயிறு தாக்குதலைத் தடுக்காமை, மத்திய வங்கி நிதி மோசடி வெளிநாடுகளுட னான ஒப்பந்தங்கள் என்று எல்லாம் அரசியல் அரங்கில் பேசப்பட்டன.

இவை மனைவியுடன் வெளிநாடு சென்றதாக்க் கூறப் படும் விடயத்தை விட கடுமை யான விடயங்களாகும்-என் றார். (அ)

# மகிந்தவை கைது செய்யும் திட்டம் எதுவும் கிடையாது!

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்



கொழும்பு, ஒக. 26

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை கைது செய் யும் திட்டம் எதுவும் இல்லை என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்துள்ளார்.**

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப் பட்டமையைத் தொடர்ந்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் கைது செய்யப் படலாம் என்று ஊகங்கள் எழுந் தன. இது குறித்த கேள்விகளுக்கு பதில் அளித்த அமைச்சர்,

"யாரையும் கைது செய்ய எந்த முயற்சியும் மேற்கொள்ள வில்லை. அது எங்கள் நோக்கம் அல்ல. கடந்த காலத்தில் செய் யப்பட்ட குற்றங்களை மட்டுமே அரசாங்கம் விசாரித்து வருகிறது.

குற்றவியல் புலனாய்வுத் துறை, நிதிக் குற்றப் புலனாய் வுத் துறை, சைபர் குற்றப் பிரிவு, இலஞ்சம் அல்லது ஊழல் குற் றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணையகம் போன்ற சுயாதீன அமைப்புகளால் விசாரணைகள் பாரபட்சமின்றி - அரசாங்கத் தின் தலையீடு இல்லாமல் நடத் தப்படுகின்றன. அந்த நபர் முன் னாள் ஜனாதிபதியா, அமைச் சரா, பிரதி அமைச்சரா, பாரா ளுமன்ற உறுப்பினரா அல்லது ஒரு சாதாரண நபரா என்பது உண்மையில் ஒரு பொருட் டல்ல. ஒரு குற்றம் நடந்திருந் தால், அவர்கள் பதிலளிக்க வேண்டியிருக்கும்.

"அவர்கள் எங்கள் சொந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும்கூட நாங்கள் எந்த சார்பையும் கொண்டிருக்க மாட்டோம் - என்றார். அத்து டன், இந்தக் கருத்தை அடிக் கோடிட்டுக் காட்டும் வகை யில், தற்போதைய அரசாங்கத் தின் எரிசக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடிக்கு எதிரான அண்மைய குற்றச்சாட்டுகளை அமைச்சர் சுட்டிக்காட்டினார். "அவர் (குமார ஜெயக்கொடி) மீது குற்றச்சாட்டுகள் இருந் தால், நிச்சயமாக அவரும் விசா ரிக்கப்படுவார்" - என்றார். (ஐ)

# தூரப் பிரதேச பஸ் புதிய அட்டவணை நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு!

கொழும்பு, ஒக. 26

இலங்கையில் தூரப் பிரதேச பஸ்களுக்கான ஒருங்கிணைந்த நேர அட்டவணை நேற்று நள் ளிரவு முதல் அமுலுக்கு வந்தது என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதன்படி, கொழும்பிலி ருந்து சிலாபம், புத்தளம், ஆன மடு, எலுவான்குளம், கற்பிட்டி, மன்னார், தலைமன்னார், குளி யாப்பிட்டி, நிக்கவரட்டிய, அநுராதபுரம், வவுனியா, கிளி நொச்சி, யாழ்ப்பாணம், காங் கேசன்துறை, காரைநகர் மற் றும் துணுக்காய் ஆகிய பகுதி களுக்கான புதிய நேர அட்ட வணை அமுல்படுத்தப்பட் டுள்ளது.

பஸ் சேவைகள் கொழும்பு புறக்கோட்டை பஸ்டியன் மாவத்தையில் உள்ள தனியார் பஸ் நிலையத்திலிருந்து ஆரம் பமாகும். அத்துடன் நான்கரை மணி நேர பயணத்திற்குப் பின் ஓட்டுநருக்கு ஓய்வு நிறுத்தம் வழங்கப்படும் என்றும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (அ)

# கடலில் நீராடச் சென்ற 2 மாணவர்கள் மாயம்!

கொழும்பு, ஒக. 26

பயகல கடற்பகுதியில் நீரா டச் சென்ற 2 மாணவர்கள் நீரில் மூழ்கி காணாமற்போயுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் பயகல பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாடுக்கு அமைய விசா ரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

காணாமற்போன 2 மாண வர்களும் கல்பான மற்றும் பாணந் துறை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 15 வயதுடையவர்கள் என தெரியவந்துள்ளது.

குறித்த இருவரும் மேலதிக வகுப்புக்குச் செல்வதாக பெற் றோரிடம் கூறிவிட்டு, அந்த கடற்பகுதிக்கு நீராடச் சென்ற நிலையில் காணாமற்போயுள் ளதாக முதற்கட்ட விசாரணை யில் தெரியவந்துள்ளது. (அ)

# ரணிலின் கைது கவலை தருகிறது

## கூறுகிறார் சந்திரிகா

கொழும்பு, ஒக. 26

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கைது தொடர்பாக முன்னாள் ஜனா திபதி சந்திரிகா பண்டாரநா யக்க குமாரதுங்க அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

விசாரணை கிட்டத்தட்ட நிறைவடைந்துள்ள நிலையில், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கைது, நாட் டின் அடிப்படை ஜனநாயக நிறு வனங்களின் வலிமை குறித்து கடுமையான கவலைகளை ஏற் படுத்தியுள்ளதாக அந்த அறிக் கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

இதன் விளைவுகள் ஒரு தனி நபரின் அல்லது எந்தவொரு அரசியல் கட்சிகளின் தலைவிதி யையும் விட, சமூகத்தின் உரி மைகளுக்கான பிரச்னைகளை தோற்றுவிப்பதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க தமது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசியல் தலைவர்களுக்கு எதிரான இந்த நடவடிக்கை களை தாம் கடுமையாக எதிர்ப் பதாகவும் அவர் குறிப்பிட்டுள் ளார். (அ)

# தென்கொரியாவில் வேலை தருவதாகக் கூறி ரூபா 150 மில்லியன் மோசடி செய்தவர் கைது!

கொழும்பு, ஒக. 26

தென் கொரியாவில் வேலை வாய்ப்பு பெற்று தருவதாகக் கூறி, ரூ.150 மில்லியனுக்கும் அதிகமாக மோசடி செய்ததாக ஒருவரை கொழும்பு குற்றப்பி ரிவு கைது செய்துள்ளது.

முல்லைத்தீவு, பூவரசங்கு ளம், தாரேகுளம் பகுதியில் நேற்று முன் தினம் குறித்த நபர் கைது செய்யப்பட்டதாக பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர் கொழும்பு 15 ஐச் சேர்ந்த 41 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது.

தென் கொரியாவில் வேலை வாய்ப்பு பெற்று தருவதாகக் கூறி, குறித்த நபர் 150 பேரிட மிருந்து ரூ.150 மில்லியனுக்கும் அதிக மாக மோசடி செய்ததாக விசார ணையில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட போது, சந்தேக நபரிடமிருந்து ஒரு ஜீப், ஒரு காணிக்காகச் சட் டத்தரணி அனுமதிப்பத்திரம் மற்றும் இரண்டு தொலைபேசி கள் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. (அ)

# பணிப்புறக்கணிப்பை கைவிட்ட மருத்துவர்கள்

கொழும்பு, ஒக. 26

நாடு தழுவிய ரீதியில் நேற்று முன்னெடுக்கப்படவிருந்த பணிப்புறக்கணிப்பு கைவிடப் பட்டதாக அரச வைத்திய அதி காரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

சுகாதார அமைச்சருடன் இடம்பெற்ற கலந்துரையாட லின் பின்னர் வழங்கப்பட்ட எழுத்து மூல உறுதியை அடுத்து இந்த தொழிற்சங்கப் போராட் டத்தை கைவிட் டதாக அந்த சங்கம் தெரிவித்துள்ளது.

வைத்தியர்கள் இடமாற்றம் உள்ளிட்ட பல கோரிக் கைகளை முன்வைத்து நேற்று காலை 8.00 மணி முதல் நாடு தழுவிய ரீதி யில் பணிப்புறக்கணிப்பில் ஈடு பட முன்னதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் திட்ட மிட் டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பொலிஸ் நிலையங்களுக்கு பொறுப்பதிகாரிகளை நியமிக்கும் அதிகாரம் இனி பொலிஸ்மா அதிபரிடம்!

கொழும்பு, ஒக. 26

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளை நியமிக் கவும் இடமாற்றம் செய்யவும் தேசிய பொலிஸ் ஆணைக்குழு, பொலிஸ்மா அதிபருக்கு அதி காரம் வழங்கியுள்ளது. தேசிய பொலிஸ் துறையினால் இது தொடர்பான ஆவணம் பொலிஸ்மா அதிபருக்கு அனுப் பப்பட்டது.

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி முதல் அதற்கு மேலான பதவிகளிலுள்ள பொலிஸ் அதிகாரிகளின் இட மாற்றம் மற்றும் அவர்களுக் கான நியமனம் உள்ளிட்ட அனைத்துச் செயல்பாடுகளும் தேசிய பொலிஸ் ஆணைக்குழு வின் வசமிருந்தது.

இந்த சூழ்நிலையில், பல் வேறு ஊழல்கள், முறைகேடு கள் மற்றும் திறமையின்மை தொடர்பாக பொலிஸ் நிலை யப் பொறுப்பதிகாரிகளை பொலிஸ்மா அதிபரால் உடன டியாக இடமாற்றம் செய்ய முடியாது என்பதுடன் இது பொலிஸ் நிர்வாகத்துக்கு கடு மையான தடையாக காணப் பட்டது.

இது தொடர்பான தற்போ தைய பொலிஸ்மா அதிபர், பதில் பொலிஸ்மா அதிபராக இருந்தபோது பல சந்தர்ப்பங்க ளில் தேசிய பொலிஸ் ஆணைக் குழுவுக்கு சுட்டிக்காட்டியுள் ளார். இதன் விளைவாக தற் போது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கு எதி ராக நடவடிக்கை எடுப்ப தற்கு பொலிஸ்மா அதிபருக்கு அதி காரம் வழங்கப்பட்டுள்ளது.

பொலிஸ் பொறுப்பதிகாரி கள் சரியான காரணமின்றி இட மாற்றம் செய்யப்பட்டாலோ அல்லது பதவியில் இருந்து இடைநீக்கப்பட்டாலோ, அதற்கு எதிராக மேன்முறையீடு செய்யும் அதிகாரம் பொலிஸ் ஆணைக்குழுவுக்கு உள்ளது.

மேன்முறையீடு குறித்து விசாரணை நடத்தி, சரியான காரணமின்றி இடமாற்றம் செய் யப்பட்டிருந்தால், ஆணைக்கு ழுவுக்கு இடமாற்றத்தை சரி செய்ய வாய்ப்பு உள்ளது என ஆணைக்குழுவின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமல் ஆக்கப்பட்டோருக்கு மட்டக்களப்பில் நினைவேந்தல்



மட்டக்களப்பு, ஓக. 26


**காணாமல் ஆக்கப்பட்டவர்களை நினைவேந்தும் நிகழ்வு நேற்று முன்தினம் சித்தாண்டி சித்திர வேலாயுத சுவாமி கோவில் முன்றலில் நடைபெற்றது.**

1990ஆம் ஆண்டு மட்டகளப்பு - சித்தாண்டியில் இராணுவத்தினரின் சுற்றிவளைப்பில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டனர்.

சித்தாண்டியில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் இந்த நினைவேந்தல் ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த நிகழ்வில், மட்டக்களப்பு மாவட்ட காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத் தலைவி அ. அமலநாயகி சட்டத்தரணி த. ஜெயசிங்கம் பிரதேச சபை உறுப்பினர் சி. வவானந்தன் மற்றும் சித்தாண்டி முறக்கொட்டசேனை சந்திவெளி பகுதிகளில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ)

# தமிழ் மகா வித்தியாலயத்துக்கு அழகான நுழைவாயில் அமைப்பு



சம்மாந்துறை, ஓக. 26

அம்பாறை, சம்மாந்துறை வலயத்திலுள்ள சிறீ கோரக்கர் தமிழ் மகா வித்தியாலயத்துக்கான பிரதான நுழைவாயில் திறப்பு விழாவும் வலயத்தில் முதலிடம் பெற்ற சாதாரண தர மாணவர்களுக்கான பரிசளிப்பு விழாவும் நேற்று முன்தினம் நடைபெற்றன.

"பத்மநாதன் மகேஸ்வரி அறக் கட்டளையின்" பூரண அனுச ரணையுடன் பாடசாலையின் அதிபர் சோ. இளங்கோ பன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் பத்மநாதன் மகேஸ்வரி அறக்கட்டளையின் ஸ்தாபகர் பத்மநாதன் நடேசன் லண்டனிலிருந்து வந்து விசேட விருந்தினராக கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் பிரதம விருந் தினராக சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். மகேந் திரகுமார், சம்மாந்துறை வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர்க ளான யசீர் அரபாத், பி. பரமத யாளன், ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. சகா தேவராஜா, ஆசிரியர்கள், மாண வர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ)

# தமது கைதுகளை தடுக்கவே ரணிலின் கைதுக்கு எதிர்ப்பு

## தமிழ் அரசுக்கட்சியின் சிறீநேசன்



மட்டக்களப்பு, ஓக. 26

அடுத்தடுத்த கட்டமாக இந்தக் கைதுகள் தங்கள் பக்கமாக வந்து விடக்கூடாது என்பதற்காக அதற்கு முன்னாயத்தம் செய்கின்றார்கள். ரணில் விக்கிரமசிங்கவின் கைதுக்கு எதிராக செயல்படுவதன் மூலமாக சிலர் தமது கைதுகளை தடுத்துக் கொள்ளலாம் என நினைக்கலாம் என்று இலங்கை தமிழ் அரசுக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஞா. சிறீநேசன் தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகளின் நியமான செயல்பாடுகளை ஏற்றுக்கொள்கின்றோம். அதாவது சட்டத்துக்கு அப்பாற்பட்ட முறையில் செயல்பட்டால் அதற்கு எதிராக எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும். சட்டப்படி செயல்படுகின்ற செயல்பாடுகளுக்கு வழி விட வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

மட்டக்களப்பு ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

"அண்மையில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டுள்ளார். இந்தக் கைது தொடர்பில் பாராளுமன்றத்திலும் முன்பு சில விவாதங்கள் நடைபெற்றன. அப்போது நான் நினைக்கின்றேன் சாமர சம்பத் தஸநாயக்க ஒரு கருத்தை கூறியிருந்தார். முடிந்தால் ரணில் விக்கிரமசிங்கவை கைது செய்யுங்கள் என்கின்ற கருத்தை கூறியிருந்தார்.

இதேவேளை அரசு தரப்பு கூறிய விடயம் என்னவென்றால் சட்டத்தின் முன்னிலையில் யாவரும் சமம். சட்டத்தின் முன் பெரியவர் சிறியவர் என்கின்ற பேதம் இல்லை. அல்லது தரம் கூடியவர் தரம் குறைந்தவர் என்கின்ற வித்தியாசம் இல்லை. ஆகவே, நாங்கள் குற்றமிழைத்தவர்களை கைது செய்வோம் என்கின்ற கருத்து அப்போது பாராளுமன்றத்தில் அரசு தரப்பிலிருந்து தெரிவிக்கப்பட்டது.

அந்த வகையில் தற்போது ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டிருக்கின்றார். தனிப்பட்ட செலவு ஒன்றை பொதுச் செலவாக காட்டியிருக்கின்றார். அதாவது அவரது மனைவியின் ஒரு பட்டமளிப்பு விழாவுக்கு பிரித்தானியாவுக்கு சென்ற போது அதற்காக ஒரு கோடியே 65 இலட்சம் ரூபாயை செலவு செய்திருக்கின்றார் என்பதற்காக கைது செய்யப்பட்டிருக்கின்றார்.- என்றார். (எ)

# ரணில் விக்கிரமசிங்கவை முன்னிறுத்தி தப்பித்து கொள்ள ஊழல்வாதிகள் திட்டம்

## மைத்திரி, சஜித் மீது ஆளும் தரப்பு சாடல்

மட்டக்களப்பு, ஓக. 26

எதிர்க்கட்சிகளின் திடீர் கூட்டணி என்பது ரணில் விக்கிரமசிங்கவை காட்டிக்கொண்டு தாங்கள் தப்பித்துக்கொள்ள முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றார்கள் என்பது தெட்டத் தெளிவாக தெரிகின்றது என தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு தெரிவித்தார்.

மக்கள் மிகவும் தெளிவாக இருக்கின்றார்கள். இந்த குற்றவாளிகளை இந்த குற்றத்தோடு தொடர்பு பட்டவர்களை, ஊழல் வாதிகளை மக்கள் இனிமேலும் அனுமதிக்க மாட்டார்கள் என்பது எங்களுக்குத் தெளிவாக விளங்குகின்றது. மக்களின் ஆதரவோடும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முன்னோக்கி பயணித்துக் கொண்டிருக்கின்றது எனவும் அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

"சர்வாதிகாரத்தை தோற்கடிப்போம் எனும் தொனிப் பொருளில் முன்னாள் அரசியல் வாதிகள், கட்சி பேதமின்றி ஒன்றிணைந்து ஓர் ஊடக சந்திப்பை ஏற்பாடு செய்திருந்தார்கள். கடந்த காலங்களில் ரணில் விக்கிரமசிங்கவை விமர்சனம் செய்தவர்கள், அவருக்கு எதிராக தேர்தல் காலங்களில் மோசமான பிரசாரங்களை மேற்கொண்டவர்கள் இன்று ஒன்று சேர்ந்து அவர் நல்லவர். அவரை விடுதலை செய்ய வேண்டும் என கூறுகின்றனர்.

இதில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்கவோடு இணைந்து ஆட்சி அதிகாரத்தில் இருக்கின்ற போதும் அவருக்கு எதிராக அவரை பிரதமர் பதவியிலிருந்து நீக்கி மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக கொண்டு வந்தவர். அந்த காலகட்டத்தில் மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பாக ரணிலுக்கு எதிராக மிகப் பெரும் பிரசாரத்தை மேற்கொண்டவர். இன்று ரணிலுக்காக அவரை விடுதலை செய்யக் கோரி ஒன்று சேர்ந்திருக்கின்றார்.

அதனைப் போன்று மொட்டு கட்சியின் பிரதான செயலாளரை கூட ஊடகச் சந்திப்பில் பார்க்கக் கூடியதாக இருந்தது. அவரும் கூட நாட்டிலே மிகப் பெரிய திருடன் ரணில் எனக் குறிப்பிட்டவர். இன்று ரணிலை விட சிறந்தவர் இந்த நாட்டில் இல்லை என்று அவருக்கு ஆதரவு குரல் எழுப்புகிறார்.

அதேபோன்று இராதாகிருஷ்ணன், மனோ கணேசன் போன்றவர்கள் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் மிக அவசியமானது அந்த தேர்தலை நடத்தாமல் ரணில் விக்கிரமசிங்க காலம் தாழ்த்துகின்றார். அல்லது காலத்தை வீணடிக்கின்றார். நிதிகளை வழங்காமல் எங்களை ஏமாற்றுகின்றார் என அவருக்கு எதிராக கொதித்தெளுந்தவர்கள். இன்று அவருக்காக குரல் கொடுக்கின்ற ஒரு தலைமைத்துவமாக மாறியிருக்கின்றார்கள்.

எதிர்க்கட்சிகளின் ஊடக சந்திப்பின் போது மிக கூடுதலான தரப்பினர்கள் ஊழல் குற்றச்சாட்டோடு தொடர்பு பட்டவர்களாகவும் அவர்களுக்கு எதிராக இப்போது குற்றச்சாட்டுகள் விசாரணை செய்யப்பட்டு கொண்டிருக்கின்ற நேரத்தில் இவர்கள் ஒன்றிணைந்து குரல் எழுப்பிக் கொண்டிருக்கின்றார்கள்.

இதில் விசேடமாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை சேர்க்காது இவர்கள் தனிக் கூட்டணியாக எதிர்க்கட்சியாக களமிறங்கியிருக்கின்றார்கள்.

ஆகவே இந்த கூட்டுக் களவாணிகள் இந்த நாட்டுக்கு சொல்ல வருகின்ற செய்தி என்ன? திருடர்களை காப்பாற்ற வேண்டும். சட்டம் - ஒழுங்கை, நீதியை நிலைநாட்டக் கூடாது என்பது தான்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் நம்பிக்கை வைத்து மக்கள் வாக்களித்த போதும் அவர்கள் குறிப்பிட்ட விடயம் ஊழல் - மோசடியற்ற ஒரு நாட்டை கட்டியெழுப்ப வேண்டும். கடந்த காலங்களில் இடம்பெற்ற ஊழலுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தி அவர்களுக்குத் தண்டனை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்கின்ற விடயத்தை குறிப்பிட்டிருந்தார்கள்.

ஆகவே இந்த நேரத்தில் இப்படிப்பட்ட கூட்டாளிகள் ஒன்று சேர்ந்து தங்கள் இழைத்திருக்கின்ற குற்றங்களிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றார்கள்.

அதற்காகத்தான் ரணில் விக்கிரமசிங்கவை காட்டிக்கொண்டு தாங்கள் தப்பித்துக்கொள்ள முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றார்கள்.

ஆனால், மக்கள் மிகவும் தெளிவாக உள்ளனர்."- என்றார். (எ)

# "சமுதாய சவால்களை வெல்வோம்" மாணவர்களுக்கான விழிப்புணர்வு

தம்பலகாமம், ஓக. 26

திருகோணமலை, தம்பலகாமம் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கல்மெட்டியாவ வித்தியால மாணவர்களுக்கான "சமுதாயத்தின் சவால்களை வெல்வோம்" விழிப்புணர்வு நிகழ்வு நாடகச்செயல்பாட்டின் அணுகு முறையுடன் கடந்த 21 ஆம் திகதி நடைபெற்றது. தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ. சிறீபதியின் வழிகாட்டலுக்கு அமைய நடைபெற்றது. இதில் வளவாளராக தம்பலகாமம் பிரதேச செயலக சமுதாய சீர்திருத்த அபிவிருத்தி உத்தியோகத்தர் பா. ஹம்சபாலன் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் பாடசாலை அதிபர், ஆசிரியர், சமுதாய சீர்திருத்த அபிவிருத்தி உத்தியோகத்தர் பா. ஹம்சபாலன், கல்மெடியாவ வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவின் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் அனஸ் மற்றும் மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ-12)

# "வீரமுனை பெயர் பலகையை அகற்ற பிரதேச சபைக்கு அதிகாரம் இல்லை"

கல்முனை, ஓக. 26

வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான வீரமுனைக்கான பெயர்ப்பலகையை அகற்ற சம்மாந்துறை பிரதேச சபைக்கு எந்த அதிகாரமும் இல்லை என்று கல்முனை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் ச. ராஜன் தெரிவித்தார்.

கல்முனை ஊடக மையத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (எ-08)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல நாடுகளில் ஆயுத உற்பத்தி தொழிற்சாலை அமைத்துள்ளோம்

## ஈரான் பாதுகாப்பு அமைச்சர் தகவல்

தெஹ்ரான், ஓக. 26

**இஸ்ரேலுடனான போருக்குப்பின் முன்னுரிமைகள் மாறிவிட்டன. பல நாடுகளில் ஆயுத உற்பத்தி தொழிற்சாலைகளை அமைத்துள்ளோம் என்று ஈரான் பாதுகாப்பு அமைச்சர் அசிஸ் நசீர்சாதிஸ் தெரிவித்துள்ளார்.**



இஸ்ரேல் - ஈரான் இடையே பல ஆண்டுகளாக மோதல் போக்கு நிலவி வருகிறது. இதனிடையே, இரு நாடுகளுக்கும் இடையே கடந்த ஜூன் மாதம் போர் மூண்டது. 12 நாட்கள் நீடித்த இந்தப் போரில் இஸ்ரேலில் 32 பேரும் ஈரானில் 1060 பேரும் உயிரிழந்தனர். இந்தப் போரை தொடர்ந்து மத்திய கிழக்கில் தொடர்ந்து பதற்றமான சூழ்நிலை நிலவி வருகிறது.

இந்த நிலையில், பல நாடுகளில் ஆயுத உற்பத்தி தொழிற்சாலை அமைத்துள்ளதாக ஈரான் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சர் அசிஸ் நசீர்சாடிஸ் கூறுகையில், "ஈரான் இராணுவத்துக்கு ஏவுகணை உற்பத்தி செய்வது முக்கிய பணியாகவுள்ளது. இஸ்ரேலுடனான போருக்குப்பின் முன்னுரிமைகள் மாறிவிட்டன. பல நாடுகளில் ஈரான் ஆயுத உற்பத்தி தொழிற்சாலைகளை அமைத்துள்ளது. அந்த தொழிற்சாலைகள் விரைவில் அதிகாரபூர்வமாக திறக்கப்படும். இது தொடர்பான அறிவிப்பு விரைவில் வரும்"- என்றார். (எ)

# ஏமன்மீது இஸ்ரேல் அதிரடி தாக்குதல்

சனா, ஓக. 26

ஏமன் மீது இஸ்ரேல் அதிரடித் தாக்குதல் நடத்தியுள்ளது.

இஸ்ரேல் - ஹமாஸ் இடையேயான போர் ஓராண்டுக்கு மேல் நீடித்து வருகிறது. இந்தப் போரில் காஸா முனையில் 62 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இஸ்ரேல் - ஹமாஸ் இடையேயான போரில் ஹமாஸ் அமைப்பினர்களுக்கு ஏமனில் செயல்பட்டு வரும் ஹவுதி கிளர்ச்சியாளர் ஆதரவு வழங்கி வருகின்றனர்.

இதனிடையே, ஏமனிலிருந்து கடந்த வெள்ளிக்கிழமை இரவு இஸ்ரேல் மீது ஏவுகணை தாக்குதல் நடத்தப்பட்டது. ஹவுதி கிளர்ச்சியாளர் ஏவிய இந்த ஏவுகணை இஸ்ரேல் வான் பாதுகாப்பு அமைப்பால் நடுவானில் சுட்டு வீழ்த்தப்பட்டது.

இந்த நிலையில், ஹவுதி கிளர்ச்சியாளர்களின் ஏவுகணைத் தாக்குதலுக்கு பதிலடியாக ஏமன் மீது இஸ்ரேல் நேற்று அதிரடி தாக்குதல் நடத்தியது. ஏமன் தலைநகர் சனாவில் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகள், மின் உற்பத்தி நிலையங்கள், கச்சா எண்ணெய் சேமிப்பு கிடங்குகள் உள்ளிட்ட உட்கட்டமைப்புகள் மீது இஸ்ரேல் விமானப்படை அதிரடி தாக்குதல் நடத்தியது. ஹவுதி கிளர்ச்சியாளர்களையும் குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தத் தாக்குதலில் உயிரிழப்பு சம்பவங்கள் ஏற்பட்டதா? என்பது குறித்த விவரம் இதுவரை வெளியாகவில்லை. (எ)



# பீஹாரில் வாக்கு திருட்டு

## ராகுல் மீண்டும் குற்றச்சாட்டு

பாட்னா, ஓக. 26

இந்தியாவின் பீஹார் மாநிலத்தில் வாக்கு திருட்டு தொடர்கிறது என்று காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி மீண்டும் குற்றஞ்சாட்டியுள்ளார். வரும் நவம்பரில் பீஹாரில் சட்டப் பேரவைத் தேர்தல் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதையொட்டி அந்த மாநிலத்தில் அண்மையில் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தப் பணி மேற்கொள்ளப்பட்டு கடந்த முதலாம் திகதி வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது. இதில் 65 இலட்சம் பேரின் பெயர்கள் நீக்கப்பட்டன.

இந்தச் சூழலில் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தப் பணியை எதிர்த்து ராகுல் காந்தி, பீஹார் முழுவதும் 16 நாட்கள் பேரணி நடத்தி வருகிறார். அவர் நேற்று முன்தினம் பீஹாரின் அரரியா, புர்னியா பகுதியில் பேரணி நடத்தினார். அப்போது ராகுல் தலைமையில் மோட்டார் சைக்கிள் பேரணி நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு குற்றஞ்சாட்டினார். (எ)

# ரஷ்ய அணுமின் நிலையம்மீது உக்ரைன் ட்ரோன் தாக்குதல்

மொஸ்கோ, ஓக. 26

ரஷ்ய அணு மின் நிலையம் மீது உக்ரைன் ட்ரோன் தாக்குதல் நடத்தியுள்ளது.

உக்ரைன் - ரஷ்யா இடையேயான போர் இன்று ஆயிரத்து 278 ஆவது நாளாக நீடித்து வருகிறது. இந்த போரில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர். இதனிடையே, இந்தப் போரை முடிவுக்கு கொண்டுவர அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தீவிரம் காட்டி வருகிறார். ஆனாலும், போர் தொடர்ந்து நீடித்து வருகிறது.

இந்த நிலையில், ரஷ்யாவின் குருஷ்க் பகுதியில் உள்ள அணு மின் நிலையம் மீது உக்ரைன் இராணுவம் ட்ரோன் தாக்குதல் நடத்தியது. இதனால், அணு மின் நிலையம் தீப்பற்றி எரிந்தது. உடனடியாக விரைந்து சென்ற தீயணைப்புத்துறையினர் பற்றி எரிந்த தீயை உடனடியாக அணைத்தனர். இந்தத் தாக்குதலில் யாருக்கும் எந்தவித காயமும் ஏற்படவில்லை என ரஷ்யா தெரிவித்துள்ளது.

உக்ரைனின் 34 ஆவது சுதந்திர தினம் நேற்று கொண்டாடப்பட்ட நிலையில் ரஷ்ய அணு மின் நிலையம் மீதான தாக்குதல் போர் பதற்றத்தை மேலும் அதிகரித்துள்ளது. (எ)

# சீனாவை மிரட்டும் 'கஜிகி' புயல்

பீஜிங், ஓக. 26

சீனாவின் தெற்கு பகுதியில் உள்ள சான்யா நகரின் தென்கிழக்கே சுமார் 200 கிலோ மீற்றர் தொலைவில் ஒரு வெப்பமண்டல புயல் மையம் கொண்டுள்ளது. இந்தப் புயலுக்கு 'கஜிகி' என பெயரிடப்பட்டுள்ளது. கஜிகி புயல் வடமேற்கு நோக்கி மணிக்கு சுமார் 20 கிலோ மீற்றர் வேகத்தில் நகர்ந்து வருவதாகவும் இந்தப் புயல் மேலும் தீவிரமடைந்து காற்றின் வேகம் மணிக்கு 48 கிலோ மீற்றராக அதிகரிக்கக் கூடும் என்றும் சீனாவின் தேசிய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.


இந்த நிலையில், 'கஜிகி' புயல் எச்சரிக்கை காரணமாக சீனாவின் சுற்றுலா நகரமான சான்யாவில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அனைத்து வணிக வளாகங்களும் மூடப்பட்டு, பொது போக்குவரத்தும் நிறுத்தப்பட்டது. சுமார் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீன்பிடிப் படகுகள் கரையில் நிறுத்தப்பட்டுள்ளன. இந்தப் புயல் வியட்நாமை நோக்கி நகர்வதற்கு முன்பாக சீனாவின் தெற்கு தீவு மாகாணமான ஹைனானின் தெற்கு கடற்கரையில் கரையைக் கடக்கக்கூடும் என்று வானிலை மையம் தெரிவித்துள்ளது. (எ)

# மக்கள்மீது ஸ்டாலினுக்கு அக்கறையே கிடையாது

## பழனிச்சாமி குற்றச்சாட்டு

சென்னை, ஓக. 26

தமிழக முதல்வர் ஸ்டாலினுக்கு எப்போதும் குடும்ப சிந்தனைதான். வாக்களித்த மக்கள் மீது அவருக்கு அக்கறை கிடையாது என்று அ.தி.மு.க. பொதுச் செயலாளர் பழனிச்சாமி கூறினார். 'மக்களை காப்போம் தமிழகத்தை மீட்போம்' என்ற பிரசார சுற்றுப்பயணம் மேற்கொண்டு வரும் பழனிச்சாமி, திருச்சி மாவட்டம் மண்ணச்சநல்லூர் சட்டப்பேரவைத் தொகுதியில் நேற்று முன்தினம் பொதுமக்களிடையே பேசும் போது இவ்வாறு குறிப்பிட்டார்.





தி.மு.க. அரசு ஏழைகளுக்காக ஏதாவது ஒரு திட்டம் கொண்டுவந்ததா? முதல்வர் ஸ்டாலினுக்கு எப்போதும் தனது குடும்பத்தைப் பற்றிய சிந்தனைதான் உள்ளது. வாக்களித்த நாட்டு மக்களைப் பற்றி அவருக்கு அக்கறை கிடையாது. தொழிலாளி, விவசாயி, மாணவர் என ஒட்டுமொத்த மக்களுக்கும் அ.தி.மு.க. ஆட்சியில் பலன் கிடைத்தது. ஆனால், தற்போது கருணாநிதி குடும்பம் தான் பிழைக்கிறது- இவ்வாறு அவர் கூறினார். (எ)

# "மக்கள் நலனை காப்பதில் தமிழகம் என்றும் முதலிடம்"

## அதிகாரிகளுக்கு முதல்வர் அறிவுறுத்தல்

சென்னை, ஓக. 26






மருத்துவ சேவை வழங்குவதிலும் மக்களின் உடல்நலனைக் காப்பதிலும் தமிழகம் என்றும் முதலிடம் என்பதை உறுதி செய்வோம் என்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்ட சமூக வலைதளப்பதிவில் கூறியிருப்பதாவது:

பரிசோதனைகள் மட்டுமின்றி, முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்தின்கீழ் பதிவு செய்தல் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான அரசு அங்கீகார சான்றிதழ் வழங்குதல் போன்ற சேவைகளும் வழங்கப்படுகின்றன. மக்களின் உடல் நலனை காப்பதில் தமிழகம் முதலிடம் என உறுதிசெய்வோம்- இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3ஆவது ஒருநாள் போட்டியில் ஆஸி. அணி ஆறுதல் வெற்றி

## தொடரை கைப்பற்றியது தென்னாபிரிக்க அணி

மெக்கே, ஓக. 26

தென்னாபிரிக்காவுக்கு எதிரான 3ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 276 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஆறுதல் வெற்றி பெற்றது. இதே வேளை, தொடரை 2-1 என்ற கணக்கில் தென்னாபிரிக்க அணி கைப்பற்றியது.


தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி, அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு ஒருநாள் கிரிக்கெட் தொடரில் விளையாடியது. முதல் 2 போட்டிகளிலும் தென்னாபிரிக்க அணி வெற்றி பெற்று 2-0 என்ற கணக்கில் தொடரில் முன்னிலையில் இருந்தது.

இந்த நிலையில் இவ்விரு அணிகளுக்கும் இடையிலான 3ஆவது மற்றும் கடைசி ஒரு நாள் கிரிக்கெட் போட்டி மெக்கே நகரில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 50 ஓவர்களில் 2 விக்கெட்கள் இழப்புக்கு 431 ஓட்டங்கள் குவித்தது. டிராவிஸ் ஹெட் 103 பந்துகளில் 142 ஓட்டங்களும் அணித் தலைவர் மிட்செல் மார்ஷ் 106 பந்துகளில் 100 ஓட்டங்களும் கேமரூன் கிரீன் 55 பந்துகளில் 118 ஓட்டங்களும் குவித்தனர். அலெக்ஸ் ஹெரி 37 பந்துகளில் 50 ஓட்டங்கள் எடுத்தார்.

இதையடுத்து 432 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 24. 5 ஓவர்களில் 155 ஓட்டங்களுக்குச் சுருண்டது.

எய்டன் மார்க்ரம் 2, ரியான் ரிக்கெல்டன் 11, அணித்



தலைவர் தெம்பா பவுமா 19, டோனி டி ஜோர்ஸி 33, டிரிஸ்டன் ஸ்டப்ஸ் 1, டெவால்ட் பிரேவிஸ் 49, வியான் முல்டர் 5, கார்பின் போஷ் 17, செனுரன் முத்துச்சாமி 9 ஓட்டங்கள் எடுத்தனர். இதனால், 276 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலிய அணி அபார வெற்றி பெற்றது. இந்தத் தொடரில் அந்த அணிக்கு இது ஆறுதல் வெற்றியாக அமைந்தது.

இந்த நிலையில், தொடர்ந்து 2 - 1 என்ற கணக்கில் ஒருநாள் தொடரை தென்னாபிரிக்க அணி கைப்பற்றியது. ஆட்டநாயகனாக சதமடித்த டிராவிஸ் ஹெட்டும் தொடர் நாயகனாக கேசவ் மகராஜும் தெரிவு செய்யப்பட்டனர். (எ)

# ஓய்வை அறிவித்தார் புஜாரா



சென்னை, ஓக. 26

அனைத்து விதமான இந்திய கிரிக்கெட்டில் இருந்தும் ஓய்வு பெறுவதாக புஜாரா அறிவித்துள்ளார்.

37 வயதான புஜாரா இந்திய அணியின் சிரேஷ்ட வீரர்களில் ஒருவராக திகழ்ந்தார். டெஸ்ட் அணியில் இடம்பெற்று சர்வதேச போட்டிகளில் விளையாடி வந்தார். கடைசியாக கடந்த 2023இல் அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான ஐ.சி.சி. டெஸ்ட்சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் விளையாடியிருந்தார். இதன் பின்னர் அவருக்கு அணியில் வாய்ப்பு மறுக்கப்பட்டது.


இந்திய அணிக்காக 103 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 7195 ஓட்டங்கள் குவித்துள்ளார். இதில் 19 சதங்கள் மற்றும் 35 அரைச் சதங்கள் அடங்கும்.

இந்திய அணிக்காக 100 டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய 13ஆவது வீரர் என்ற பெருமையை புஜாரா பெற்றவர். கடந்த 2010இல் அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக அறிமுக வீரராக டெஸ்ட் கிரிக்கெட்டில் விளையாட துவங்கினார்.

தடுப்புமுறை ஆட்டத்துக்கு பெயர் போனவர் புஜாரா. இக்கட்டான சூழலில் அணியின் மீட்பராக செயல்பட்டு விளையாடும் திறன் படைத்தவர்.

இந்தச் சூழலில் சுமார் இரண்டு ஆண்டு காலமாக இந்திய அணியில் அவருக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. உள்ளூர் கிரிக்கெட்டில் சிறப்பாக செயல்பட்டும் இந்த நிலை தொடர்ந்தது. இதே நிலையை ரஹானேவும் எதிர்கொண்டு வருகிறார். அண்மையில் முடிந்த இங்கிலாந்து தொடருக்கு முன்னதாக கோலி மற்றும் ரோஹித் சர்மா என இருவரும் டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தனர். இந்தச் சூழலில் புஜாராவும் இப்போது ஓய்வை அறிவித்துள்ளார். (எ)

# அவுஸ்திரேலியாவுக்கு எதிராக தென்னாபிரிக்க அணி சாதனை



சிட்னி, ஓக. 26

ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக தென்னாபிரிக்கா மாபெரும் சாதனை படைத்தது.

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடியது. இதில் கெய்ன்ஸில் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் 98 ஓட்டங்கள் வித்தியாசத்திலும் மெக்கேயில் நடைபெற்ற 2ஆவது ஆட்டத்தில் 84 ஓட்டங்கள் வித்தியாசத்திலும் தென்னாபிரிக்கா வெற்றி பெற்று தொடரை கைப்பற்றியது.

இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 3ஆவது மற்றும் கடைசி ஒருநாள் கிரிக்கெட் போட்டி மெக்கே நகரில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் முதலில் துடுப்பாட்டம் செய்த அவுஸ்திரேலிய அணி 50 ஓவர்களில் 2 விக்கெட்களை இழந்து 431 ஓட்டங்கள் குவித்தது.

தென்னாபிரிக்க அணி வெறும் 155 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இதன் மூலம் 276 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலியா அபார வெற்றி பெற்றது.

இருப்பினும், 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை தென்னாபிரிக்கா 2-1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரை தென்னாபிரிக்கா கைப்பற்றுவது இது 9ஆவது முறையாகும். இதன் மூலம் ஒருநாள் கிரிக்கெட் வரலாற்றில் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக அதிக தொடர்களை வென்ற அணி என்ற மாபெரும் சாதனையை தென்னாபிரிக்கா படைத்துள்ளது. இதில் இந்தியா 6 வெற்றிகளுடன் 3ஆவது இடத்தில் உள்ளது.

அந்த பட்டியல் வருமாறு,

1. தென்னாபிரிக்கா - 9 வெற்றிகள்,
2. இங்கிலாந்து - 8 வெற்றிகள்,
3. இந்தியா - 6 வெற்றிகள்,
4. இலங்கைஃபாகிஸ்தான் - 4 வெற்றிகள். (எ)

# இங்கிலாந்துடன் ஒருநாள் தொடர்: தென்னாபிரிக்க அணி அறிவிப்பு

கேப்டவுன், ஓக. 26

இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் மற்றும் ரி- 20 தொடரில் விளையாடவுள்ள தென்னாபிரிக்க அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு தலா 3 போட்டிகள் கொண்ட ரி - 20 மற்றும் ஒருநாள் தொடரில் விளையாடவுள்ளது. இதில் இவ்விரு அணிகளுக்கும் இடையே முதலில் ஒரு நாள் தொடரும், அடுத்ததாக ரி - 20 போட்டிகளும் நடைபெறவுள்ளன. இதன்படி முதல் ஒருநாள் போட்டி லீட்ஸ் மைதானத்தில் செப்ரெம்பர் 2ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்த நிலையில் இந்த சுற்றுப்பயணத்துக்கான தென்னாபிரிக்க அணிகள் (ரி - 20, ஒருநாள்) அறிவிக்கப்பட்டுள்ளன. ரி - 20 அணிக்கு மார்க்ரமும், ஒருநாள் அணிக்கு பவுமாவும் தலைவர்களாக தொடருகின்றனர். அதிரடி வீரரான டேவிட் மில்லர் மீண்டும் ரி - 20 போட்டிகளுக்கான அணியில் இடம்பெற்றுள்ளார்.

தென்னாபிரிக்க அணிகள் பின்வருமாறு:-

ஒருநாள்: டெம்பா பவுமா, டோனி டி ஜோர்ஜி, லுங்கி நிகிடி, கார்பின் போஷ், கேசவ் மகாராஜ், லுவான்-ட்ரே பிரிட்டோரியஸ், மேத்யூ பிரீட்ஸ்கே, க்வேனா மபாகா, காகிசோ ரபாடா, டெவால்ட் பிரெவிஸ், மார்க்ராம்,



ரியான் ரிக்கல்டன், நந்த்ரே பர்கர், வியான் முல்டர், டிரிஸ்டன் ஸ்டப்ஸ், செனுரன் முத்துசாமி.

ரி - 20 அணி: மார்க்ரம், கேசவ் மஹராஜ், லுவான்-ட்ரே பிரிட்டோரியஸ், கார்பின் போஷ், குவேனா மபாகா, ககிசோ ரபாடா, டெவால்ட் பிரெவிஸ், டேவிட் மில்லர், ரியான் ரிக்கல்டன், டொனோவன் பெரீரா, செனுரன் முத்துசாமி, டிரிஸ்டன் ஸ்டப்ஸ், மார்கோ ஜான்சன், லுங்கி நிகிடி, லிசாட் வில்லியம்ஸ் ஆகியோர் அணியில் இடம் பெற்றுள்ளனர். (எ)

# அனைத்து போட்டிகளிலும் பும்ரா விளையாட மாட்டார்

கேப்டவுன், ஓக. 26

ஆசிய கிண்ணத் தொடரில் பும்ரா அனைத்து போட்டிகளிலும் விளையாட மாட்டார் என்று டி வில்லியர்ஸ் தெரிவித்தார்.

அடுத்த மாதம் டுபாய் மற்றும் அபுதாபியில் நடைபெறவுள்ள ஆசிய கிண்ணக் கிரிக்கெட் போட்டிக்கான (20 ஓவர்) இந்திய அணி சில தினங்களுக்கு முன்பு அறிவிக்கப்பட்டது. இந்த அணியில் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான ஜஸ்பிரீத் பும்ராவும் இடம்பெற்றுள்ளார்.

இருப்பினும் அவர் ஆசிய கிண்ணத் தொடரின் அனைத்து போட்டிகளிலும் விளையாடுவாரா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

இந்த நிலையில் ஆசிய கிண்ணத் தொடரின் அனைத்து போட்டிகளிலும் பும்ரா விளையாட மாட்டார் என்று தென்னாபிரிக்க முன்னாள் வீரர் ஏபி டி வில்லியர்ஸ் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறுகையில், "ரி



- 20 அணியில் பும்ராவை மீண்டும் பார்ப்பது மகிழ்ச்சியாக இருக்கிறது. முழு உடற்தகுதியுடன் அவர் விளையாடுவதற்குத் தயாராக இருக்கிறார். இருப்பினும் அவர் அனைத்து போட்டிகளிலும் விளையாடுவார் என்று நான் நினைக்கவில்லை. ஏனெனில் ஏற்கனவே இந்திய அணி நிர்வாகம் வெளியிட்டிருந்த அறிவிப்பில் அவரை பாதுகாப்பாக பயன்படுத்துவோம் என்று குறிப்பிட்டுள்ளனர்.

இதன் காரணமாக நிச்சயம் அவர் பெரிய அணிகளுக்கு எதிரான போட்டியின்போது மட்டுமே களமிறங்குவார் என்று தெரிகிறது."- என்று கூறினார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 108ஜோடிகளுக்கு...

ஜோடிகளுக்கு சீதனம், தாலி வழங்கப்பட்டு திருமணம் நடைபெறவுள்ளது. இந்தத் திருமணம் எதிர்வரும் வியாழக்கிழமை தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நடைபெறும் என்றும் ஜெயசேகரம் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார். (ஐ)

## வடகிழக்கில்...

அவற்றுக்கு என்ன நடந்தன என்று யாருக்கும் தெரியாது. தற்போது செம்மணி - அரியாலை மனிதப் புதை குழிகளில் அகழ்வு நடக்கிறது. இதில் நூற்றுக்கும் மேற்பட்ட மனித எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.

இவற்றில் 90 வீதமானவை ஆடைகளற்றே மீட்கப்பட்டன. குழந்தைகளின் எலும்புக்கூடுகளும் மீட்கப்பட்டன. இது தொடர்பில் சர்வதேச விசாரணையை கோரியும் சர்வதேச நிபுணர்களின் கண்காணிப்பில் அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுமே இந்தக் கையெழுத்து போராட்டம் நடைபெறவுள்ளது. தமிழ் தேசிய பரப்பில் பயணிக்கும் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து இந்தப் போராட்டத்தை வலுச்சேர்க்க வேண்டும் பங்கேற்ற கட்சிகளின் தலைவர்கள் வலியுறுத்தினர்.

இந்த ஊடக சந்திப்பில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செ. கஜேந்திரன், இலங்கை தமிழ் அரசு கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம். ஏ. சுமந்திரன், ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியை சேர்ந்த ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ. பி. ஆர். எல். எவ்.) தலை வர் சுரேஷ் பிறேமசந்திரன், தமிழீழ விடுதலைக் கழகத்தின் (புளொட்) தலை வர் த. சித்தார்த்தன், தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவர் செல் வம் அடைக்கலநாதன் எம். பி., சமத்துவ கட்சியின் பொது செயலாளர் மு.சந்திரகுமார், ஜனநாயக போராளிகள் கட்சி யின் தலைவர் வேந்தன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர். (ஐ)

## குருக்கள்மடம்...

நிறைவு செய்து கல்முனை வழியாக காத்தான்குடிக்கு திரும்பிய முஸ்லிம்கள் ஆயுததாரிகளால் குருக்கள்மடத்தில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இவர்கள் புதைக்கப்பட்ட இடத்தை நேற்றைய தினம் நீதிவான் நேரில் சென்று பார்வையிட்டார். அத்துடன், அதனை அகழ்வதற்கும் உத்தரவிட்டார். மேலும், அந்த இடத்துக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கவும் நீதிவான் கட்டளையிட்டார்.

இந்த வழக்கு இன்றைய தினம் காலை 9.30 மணிக்கு மீள் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. (ஐ)

## இந்தியாவிலிருந்து...

தங்கையா டேவிட் பாலேந்திரன் (வயது 40) என்பவரே இவ்வாறு சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

குறித்த நபர் கடந்த 2007ஆம் ஆண்டு கடல் மார்க்கமாக இந்தியா சென்றிருந்தார். 18 வருடங்களின் பின்னர் அவர் கடந்த 22ஆம் திகதி இந்தியாவில் இருந்து படகு மூலம் நாடு திரும்பினார்.

தலைமன்னார் கடற்படையினர் அவரை கைது செய்தனர். இதய நோயால் பாதிக்கப்பட்ட அவர் கடற்படை முகாமுக்கு அழைத்து செல்லப்பட்டு கடுமையாக தாக்கப்பட்டார் என்று கூறப்படுகிறது. இதன் பின்னர், அவர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். அவரை பொலிஸார் தலை மன்னார் மருத்துவமனையில் சேர்ப்பித்தனர்.

அவரை மருத்துவமனையில் பார்வையிட்ட பதில் நீதிவான் சந்தேகநபரை எதிர்வரும் 28ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

இந்த நிலையில், தாக்கப்பட்ட நபர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ஐ)

## அகழ்வை

நேற்று ஆரம்பமானது.

முன்னதாக இந்த மனிதப் புதை குழிகளில் இரு கட்டங்களாக அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டன. இரண்டாம் கட்டமாக தற்போது முன்னெடுக்கப்படும் அகழ்வு பணி 45 நாட்கள் முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டது. இதில், கடந்த 6ஆம் திகதி வரை இரு பகுதிகளாக 32 நாட்கள் அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டன. இந்த நிலையில், மூன்றாவது பகுதி அகழ்வுப் பணி நேற்று திங்கட்கிழமை ஆரம்ப மானது. இதுவரை, இரு புதைகுழிக ளிலுமாக 147 எலும்புக்கூடுகள் கண்டு பிடிக்கப்பட்டன. இவற்றில், 133 எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டு நீதிமன்ற கட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## படை...

டக்ளஸ் போல் தலைமையில் "பருத்தித்துறை நகரை பாதுகாப்போம்" என்ற தொனிப்பொருளில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நேற்று காலை 8 மணிக்கு பருத்தித்துறை துறைமுகப் பகுதியில் இருந்து போராட்டம் ஆரம்பமானது. அங்கிருந்து பேரணியாக நகர்ந்து பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்கு சென்று அங்கு மனு கையளிக்கப்பட்டது.

வர்த்தகர்கள் பொதுமக்கள் ஒன்றிணைந்து முன்னெடுத்த இந்தப் போராட்டத்தில் பல கட்சிகளின் அரசியல்வாதிகளும் பங்கேற்றனர்.

போராட்டத்தின்போது, "எமது நிலம் எமக்கு வேண்டும்", "நகர பகுதியில் இராணுவ முகாம் ஏன்?", "எமது தபால் கந்தோர் எமக்கு வேண்டும்", "எமது வெளிச்சவீட்டுக்கு இன்னும் ஏன் சிறைவாசம்?", "எமது கடல் வளத்தை எம்மிடம் கொடுத்து விடுங்கள்", என்று வலியுறுத்தப்பட்டது.

இதேசமயம், "பருத்தித்துறை துறைமுக பகுதி, பருத்தித்துறை நீதிமன்ற காணி, தபால் நிலைய கட்டடம், வெளிச்சவீடு என பருத்தித்துறையின் அடையாளங்களாகும். இந்தப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள படை முகாம்களை பருத்தித்துறை நகர வளர்ச்சிக்கு ஏதுவாகவும் - தேசிய பாதுகாப்புக்கு பங்கமில்லாத வகையிலும் வேறு பொருத்தமான இடத்துக்கு மாற்ற வேண்டும் அல்லது அகற்ற வேண்டும்" என்று ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

## காணாமல்....

அண்மையில், ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையர் யாழ்ப்பாணம் வந்து சித்துப்பாத்தி மனித புதை குழியையும் பார்வையிட்டார். அவரின் இந்த செயலால் நீதிக்கான சமிக்ஞை கிடைக்கும் என்று நம்பினோம். ஆனால், அத்தனையும் கலைந்துவிட்டது. அவரின் கருத்து உள்ளக பொறி முறையை எம்மிடம் திணிப்பதாக இருக்கிறது. நாம் சர்வதேச விசார ணையையே கோருகிறோம். அதற்கான வலியுறுத்தலையே இன்றும் செய்கி றோம். எமக்கு உள்ளக பொறிமுறை வேண்டாம். அதில் எமக்கு நம்பிக்கை இல்லை.

எனவே, எதிர்வரும் 30ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் சங்கிலியன் (கிட்டு) பூங்காவில் பேரணி ஆரம்பமாகி செம்மணியில் நிறைவடையும். இதேபோன்று, மட்டக்களப்பில் கல்லடி பாலத்தில் ஆரம்பமாகும் பேரணி காந்தி பூங்காவில் நிறைவடையும்.

இந்தப் போராட்டங்களுக்கு மதத் தலைவர்கள், பல்கலைக்கழக சமூகம், பாடசாலை மாணவர்கள், பொது அமைப்புகள் அரசியல் கட்சிகள் என அனைவரும் பேதமின்றி திரண்டு போராட்டத்தை வலுப்படுத்த வேண்டும் - என்று கூறினர். (ஐ)

### மாணவி வித்தியா படுகொலை:

# மேன்முறையீட்டு வழக்கு நவம்பரில் விசாரணைக்கு

கொழும்பு, ஓக. 26

புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை வழக்கில் தண்டனை விதிக்கப்பட்டவர்கள் செய்த மேன்முறையீட்டு மனுக்களை எதிர்வரும் நவம்பர் 6ஆம் திகதி விசாரணைக்கு எடுக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பிரதம நீதியரசர் பிரீத்தி பத்மன் சூரசேன தலைமையிலான அச்சலா வெங்கப்புலி, சம்பத் அபயகோன் ஆகியோர் நீதியரசர்களின் ஆயத்தால் இந்த மேன்முறையீட்டு மனுக்கள் நேற்று திங்கட்கிழமை பரிசீலிக்கப்பட்டபோதே இந்தக் கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

பிரதிவாதிகள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி, நீதிமன்றத்தின் முன் சாட்சியங்களை முன்வைத்து, வழக்கு தொடர்பான தமிழ் மொழிபெயர்ப்புகளை பெறுவதற்கு நான்கரை வருடங்களுக்கும் அதிக காலம் தேவைப்பட்டதாக சுட்டிக்காட்டினார்.

இதன்படி, மேன்முறையீட்டு விசாரணைக்கு குறுகிய காலத்துக்குள் திகதியை வழங்குமாறு பிரதிவாதி தரப்பு சட்டத்தரணி நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

இதற்கமைய, பிரதிவாதி தரப்பு சட்டத்தரணியால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை ஏற்று, மேன்முறையீட்டு மனுக்களை விரைவாக விசாரணை செய்வதற்கு திகதி வழங்கப்படும் என பிரதம நீதியரசர் பிரீத்தி பத்மன் சூரசேன தெரிவித்தார்.

இதன்படி, மேன்முறையீட்டு மனுக்களை எதிர்வரும் நவம்பர் 6 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள நீதியரசர்கள் குழாம் உத்தரவிட்டது.

2015 மார்ச் 3ஆம் திகதி, பாடசாலைக்குச் சென்று வீடு திரும்பிக் கொண்டிருந்த, சிவலோகநாதன் வித்யா என்ற 18 வயது மாணவி கடத்தப்பட்டு கூட்டுப் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டார். இது தொடர்பில் யாழ்ப்பாணம் ட்ரயல் அட் பார் 7 பேரை குற்றவாளிகளாக இனங்கண்டு கடந்த 2017ஆம் ஆண்டு மரண தண்டனை விதித்தது. எனினும், தங்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்ட விதம் சட்டத்துக்கு முரணானது என்றும் தங்களை குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவித்து விடுதலை செய்யுமாறும் கோரி, பிரதிவாதிகள் தங்கள் சட்டத்தரணிகள் ஊடாக உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீட்டு மனுக்களை தாக்கல் செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நாட்டின் ஜனநாயகத்தை பாதுகாக்க வேண்டும்!

### எதிர்க்கட்சி தலைவர் சஜித்

கொழும்பு, ஓக. 26

நாட்டின் ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டும் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

தேசிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று பார்வையிட்டார்.

இதன் பின்னர், ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு உயர் தரமான சிகிச்சை அளிக்கப்படுகிறது. அதனையிட்டு மகிழ்ச்சி அடைகிறோம். நாட்டின் ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டும். நாட்டின் உச்ச சட்டத்தின் அடிப்படையில் இயங்கவேண்டும்.

குறிப்பாக, இதைச் செயல்படுத்தும் போது அது நியாயமாக செயல்பட வேண்டும். மக்கள் உண்மையாகவே இது நியாயமாக நடக்கிறது என்று ஏற்றுக் கொள்ளவேண்டும்.

இதேபோன்று தனிச்சையாக முறையில் சட்டம் நடைமுறைப்படுத்தப்படக்கூடாது. தேர்தல் காலத்தில் கூறப்படும் விடயங்களை இதனுடன் தொடர்புபடுத்தக்கூடாது. நாங்கள் நீதித்துறை சுதந்திரமாக உள்ளது என்று நம்புகிறோம். ஆனால், சிலர் நீதிமன்ற நடவடிக்கைக்கு முன்பே கருத்துகள் தெரிவித்து, தனிப்பட்ட முறையில் அனைத்தையும் கையாண்டு செயல்படுவது நீதித்துறைக்கு அவமதிப்பை தோற்றுவிக்கும் விடயமாக அமையும். அது நமது நீதிபதிகளுக்கும் அவமதிப்பாகும். எனவே, அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் - என்றார். (ஐ)

## யாழ்.வந்த...

இவர்கள், கடந்த 2022-23ஆம் ஆண்டுகளில் இராமேஸ்வரத்தை சேர்ந்த மீனவர்கள் அவர்களின் படகுகளுடன் கடற்படையால் கைது செய்யப்பட்டனர். யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் நடந்த வழக்கு விசாரணைகளின் பின்னர் அவர்களை 2023 நவம்பர் நீதிமன்றம் விடுதலை செய்தது. இதைத் தொடர்ந்து, விடுதலையான மீனவர்களின் 7 மீன்பிடி விசைப் படகுகளை தமிழகத்துக்கு கொண்டு செல்ல அண்மையில் அரசாங்கம் அனுமதியளித்தது.

இதையடுத்து கொண்டு செல்ல அனுமதிக்கப்பட்ட ஏழு படகுகளின் நிலைமையை ஆய்வு செய்து, அவற்றை மீண்டும் தமிழகத்துக்குக் கொண்டு செல்ல 14 பேர் கொண்ட தமிழக மீனவர் குழு நேற்று திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வந்திருந்தது.

இந்தக் குழு நேற்றையதினம் மயிலிட்டில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமது படகுகளை பார்வையிட்டது. இந்தப் படகுகள் தமிழகத்துக்குக் கொண்டு செல்லக்கூடிய நிலையில் இருப்பதால் அவற்றை அங்கு கொண்டு செல்லத் தீர்மானித்துள்ளதாக மீனவர் குழு தெரிவித்தது. (ஐ)

## அடுத்த....

மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல், சமூக சேவைகள், கூட்டுறவு, உணவு வழங்கலும் விநியோகமும் மற்றும் தொழிற்துறையும் தொழில் முனைவோர் மேம்பாடும் மற்றும் வர்த்தக வாணிப அமைச்சின் கீழ் இந்த ஆண்டு நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் தொடர்பில் ஆராயும் மாதாந்த கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போது, மகளிர் விவகார அமைச்சு, சமூகசேவைகள் திணைக்களம், தொழிற்றுறை திணைக்களம், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு என ஒவ்வொரு திணைக்களத்தினதும் திட்டங்களின் முன்னேற்றங்கள் விரிவாக ஆராயப்பட்டன.

நிதி ஆணைக்குழு, அடுத்த ஆண்டுக்குரிய திட்டங்களை இந்த ஆண்டின் இறுதிக்குள்ளேயே அனுமதிப்பதாகத் தெரிவித்துள்ளமை சிறப்பான விடயம் எனக் குறிப்பிட்ட ஆளுநர், விரைவாக திட்டங்களை அடையாளம் காண வேண்டும் என்றும் தெரிவித்தார். அத்துடன் முன்னெடுக்கப்படும் திட்டங்களின் விளைவுகள் என்ன என்பதையும் அதை முன்னிறுத்தியே திட்டங்கள் அடையாளப்படுத்தப்பட வேண்டும் எனவும் ஆளுநர் இங்கு குறிப்பிட்டார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# ரணிலைப் பார்ப்பதற்கு செல்லவில்லை ஹரிணி!

## செய்திகளை மறுக்கும் பிரதமர் அலுவலகம்

கொழும்பு, ஓக. 26

**பிரதமர் ஹரிணி அமரசூரிய ரணிலைப் பார்க்க சென்றார் எனக் கூறப்படும் கருத்து உண்மைக்கு புறம்பானது எனப் பிரதமர் அலுவலகம் அறிக்கை வெளியிட்டுள்ளது.**

பிரதமரின் செயலாளர் பிரதீப் சப்புதந்திரி அறிக்கை ஒன்றில் இதனைத் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பார்வையிட பிரதமர் ஹரிணி அமரசூரிய நேற்று முன் தினம் அதிகாலை கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு சென்றார் என செய்திகள் வெளியாகியிருந்தன.

முன்னாள் ஜனாதிபதியின் மனைவி மைத்ரி விக்கிரமசிங்கவுடன் பிரதமர் மருத்துவமனைக்கு சென்றார் என மருத்துவமனை வட்டாரங்களை மேற்கோள் காட்டி நேற்று செய்திகள் வெளியிடப்பட்டன. இதனையே பிரதமர் அலுவலகம் மறுத்துள்ளது.

இதேவேளை, புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள ரணில் விக்கிரமசிங்கவின் மனைவி மைத்ரி விக்கிரமசிங்க, தனது நோய் குறித்தும் ரணில் விக்கிரமசிங்கவின் கைது குறித்தும், சமூக ஊடகங்களில் இதயபூர்வமான கருத்துக்களை வெளியிட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## சீன வர்த்தகரை கடத்திச் சென்று 60 ஆயிரம் டொலர்கள் கொள்ளை

### பொலிஸ் விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, ஓக. 26

கொழும்பு கொள்ளுப்பிட்டிப் பகுதியில் வைத்து வெள்ளிக்கிழமை இரவு சீன வர்த்தகர் ஒருவரை கடத்திச் சென்று 60 ஆயிரம் அமெரிக்க டொலர்களை கொள்ளையடித்து தப்பிச் சென்ற சீனப் பிரஜைகள் அடங்கிய கும்பல் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கொள்ளுப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்டவர் கொள்ளுப்பிட்டி, ஆர்.ஏ. டி மெல் மாவத்தையில் வர்த்தக நிலையம் ஒன்றை நடத்தி வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஒரு நாள் முழுவதும் கட்டடம் ஒன்றில் அடைத்து வைக்கப்பட்டிருந்ததாகவும், சந்தேக நபர்கள் பணத்தை கொள்ளையடித்துவிட்டு தன்னை வீதியோரம் விட்டு தப்பிச் சென்றதாகவும் பாதிக்கப்பட்ட சீன வர்த்தகர் கொள்ளுப்பிட்டி பொலிஸாரிடம் முறையிட்டுள்ளார்.

இந்நிலையில்,
பாதிக்கப்பட்ட சீன வர்த்தகர் நார ஹேன்பிட்டியில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் கொள்ளுப்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ரணில் விக்கிரமசிங்கவின் கைது பின்னணியில் அரசியல் தலையீடு

கொழும்பு, ஓக. 26

இலங்கையில் உயர் பதவியை வகித்தர்களுக்கு எதிராக சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதா இல்லையா என்பது அரசியல் ரீதியான முடிவாகவே உள்ளதாக பேராசிரியர் நிர்மல் ரஞ்சித் தேவசிறி தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கைது செய்யும் செயல்முறை அரசியல் ரீதியானது எனவும் அதை மறைக்கவேண்டிய அவசியமில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிணை வழங்கும் செயல்பாட்டில் சட்டமா அதிபர் திணைக்களம் தலையிடுவது என்பது அரசாங்கத்தின் அரசியல் தலையீடு என நிர்மல் தேவசிறி குறிப்பிட்டார்.

## ரணில் கைது என்பது மிக சாதாரண விடயம்

### கூறுகிறார் அமைச்சர் பிமல்



கொழும்பு, ஓக. 26

ரணில் கைது என்பது மிகச் சாதாரண விடயம் எனவும், சட்டம் தன் வேலையை செய்வதாகவும் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் கருத்து வெளியிட்ட அமைச்சர், ரணில் கைது செய்யப்பட்டமை அரசியல் பழிவாங்கல் அல்ல எனவும் சுட்டிக்காட்டினார்.

ரணில் கைதானமை சிலருக்குப் பிரச்னையாக இருக்கலாம். ஆனால் ஊழல் மோசடி அதிகாரத் துஷ்பிரயோகம் தொடர்பாக மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவேண்டும் எனவும் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார். (அ)

## ரணிலைப் பார்க்க வருவோரை மட்டுப்படுத்துவதற்கு தீர்மானம்!

கொழும்பு, ஓக. 26

தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உடல் நிலையைக் கருத்தில் கொண்டு, அரசியல் வாதிகள் மற்றும் நலன் விரும்பிகள் அவரைப் பார்வையிடுவதை மட்டுப்படுத்துமாறு கொழும்பு தேசிய மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் ருக்ஷான் பெல்லன்ன கோரியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதியை நேரில் சென்று பார்ப்பதற்காக பலர் வருவதால் அது அவரது உடல்நிலைக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கொழும்பு தேசிய மருத்துவமனையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வரும், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உடல் நிலை சீராக இருப்பதாக கொழும்பு தேசிய மருத்துவமனையின் பதில் பணிப்பாளர் மருத்துவர் பிரதீப் விஜேசிங்க தெரிவித்துள்ளார். (அ)

## 676 பேர் கைது!

கொழும்பு, ஓக. 26

நாடளாவிய ரீதியில் நேற்று பொலிஸாரால் நடத்தப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது குற்றச் செயல்களில் ஈடுபட்ட சந்தேகத்தின் பேரில் 676 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சுற்றிவளைப்பில் 26,688 பேர் ஈடுபடுத்தப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

குற்றச் செயல்களுடன் நேரடியாக தொடர்புடைய 26 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதோடு பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 204 சந்தேகநபர்கள் இந்த சுற்றிவளைப்பின்போது கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். மதுபானம் அருந்திய நிலையில் வாகனம் செலுத்திய 67 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் முறையற்ற விதத்தில் வாகனங்களை செலுத்திய 11 பேர் உட்பட போக்குவரத்து விதிகளை மீறிய 3,422 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

## மகிந்தானந்த அளுத்கமகே, நளின் மேல்முறையீட்டு மனு ஒத்திவைப்பு

கொழும்பு, ஓக. 26

கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர்களான மகிந்தானந்த அளுத்கமகே மற்றும் நளின் பெர்னாண்டோ ஆகியோர், தண்டனைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனு ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

குறித்த மனுவை எதிர்வரும் செப்ரெம்பர் 23ஆம் திகதிக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ள கொழும்பு உயர் நீதிமன்றத்தின் மூன்று நீதிய ரசர்கள் கொண்ட அமர்வு நேற்று உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2014 ஜனாதிபதித் தேர்தல் காலப்பகுதியில் சதொச நிறுவனத்தின் ஊடாக கரம் போர்ட் மற்றும் டாம் போர்ட் ஆகியவற்றை இறக்கு மதி செய்து அரசியல் இலாபம் பெற்றுக்கொள்ளும் நோக்கில் விளையாட்டுச் சங்கங்களுக்கு பகிர்ந்தளித்த சம்பவம் தொடர்பிலேயே அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை, குறித்த வழக்கு தொடர்பாக முன்னாள் அமைச்சர்களான மகிந்தானந்த அளுத்கமகே மற்றும் நளின் பெர்னாண்டோ ஆகியோர் தங்கள் சிறைத் தண்டனையை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளதால், இறுதி முடிவு வரும் வரை தங்களை பிணை யில் விடுவிக்கக் கோரி இந்த மனுக்களை தாக்கல் செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## கிராமிய அபிவிருத்தி திட்டங்களுக்காக இதுவரை 700 மில்லியன் ரூபா விடுவிப்பு

கொழும்பு, ஓக. 26

இந்த ஆண்டுக்கான கிராமிய அபிவிருத்தி திட்டங்களுக்கான நிதி, இம்மாத இறுதிக்குள் பிரதேச செயலாளர்களுக்கு விடுவிக்கப்படும் என்று கிராமிய அபிவிருத்தி அமைச்சு அறிவித்துள்ளது.

கிராமிய அபிவிருத்தித் திட்டங்களுக்கான இதுவரை சுமார் ரூ. 700 மில்லியன் நிதி விடுவிக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் சம்பத் மந்திரிநாயக்க தெரிவித்தார்.

நிதியைப் பெற்ற பிரதேச செயலாளர்கள் திட்டங்களை உடனடியாகச் செயற்படுத்தத் தொடங்கியுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, 100 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான மதிப்புள்ள கிராமிய அபிவிருத்தி முயற்சிகள் தற்போது நடைபெற்று வருவதாகவும், நடந்து வரும் அனைத்து திட்டங்களிலும் நிலையான முன்னேற்றத்தை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் மந்திரிநாயக்க கூறினார். (அ)

## புதையல் தோண்டிய குற்றச்சாட்டு பிரதிப் பொலிஸ்மா அதிபர் கைது!

கொழும்பு, ஓக. 26

கொழும்புக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் உதித்த லியனகே, புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் நேற்று கைது செய்யப்பட்டார்.

அநுராதபுரம் - திபிரிகடவல பகுதியில் உள்ள விகாரைக்கு அருகில், அவருடைய மனைவி மற்றும் ஏழு பேர் புதையல் எடுக்க முயற்சித்த குற்றச்சாட்டில் ஏற்கனவே கைது செய்யப்பட்டனர்.

இதை தொடர்ந்து தாம் பிரதி பொலிஸ் மா அதிபர் என்றும், தமது மனைவியை உடனடியாக விடுவிக்குமாறும் அநுராதபுரம் பொலிஸாருக்கு அழுத்தம் கொடுத்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களம் விசாரணைகளை முன்னெடுத்தது.

இதன்போது பொலிஸ் மா அதிபர் புதையல் தோண்டப்பட்ட தாகக் கூறப்படும் இடத்துக்கு சென்றமைக்கான ஆதாரங்கள், தொலைபேசி ஆய்வுகள், சிசிரிவி கமெரா காட்சிகளை அடிப்படையாகக் கொண்டு அவர் கைது செய்யப்பட்டார். (அ)

## 10 வீடுகள் தீக்கிரை

கொழும்பு, ஓக. 26

பூண்டுலோயா, டன்சினன் மத்திய பிரிவில் உள்ள லயன் குடியிருப்பில் நேற்று முற்பகல் 11 மணியளவில் ஏற்பட்ட திடீர் தீவிபத்தில் சுமார் 10 வீடுகள் தீக்கிரையாகியுள்ளன.

தீ விபத்துக்குள்ளான குடியிருப்புத் தொகுதியில் பெருமளவான பெறுமதி மிக்க பொருட்கள் தீக்கிரையானதாக குடியிருப்பாளர்கள் தெரிவித்தனர்.

தீ விபத்துக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில், அப்பகுதியில் உள்ள இளைஞர்கள் தோட்டத்தில் உள்ள மக்கள் இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு லிமிட்டெட் நிறுவனத்தினரால் 26.08.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org